Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 328 | திங்கட்கிழமை | ஐப்பசி 08 ஆம் நாள் 25 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



# நாக விகாரையை ஒழிக்க மாநகர சபை முயற்சியாம்

**ஆரியகுளம் சீரமைப்பை உடன் நிறுத்துமாறு யாழ்.மேயருக்கு நாகவிகாராதிபதி கடிதம்**

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 25

நாகவிகாரையை இல்லாதொழிக்கவே ஆரியகுளம் சீரமைப்புத் திட்டத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் ஆரம்பித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டியுள்ள ஸ்ரீநாக விகாரை விகாராதிபதி விமலதேரர், உடனடியாக இந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று கடும் தொனியில் யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்று நம்பகரமாக அறியமுடிகின்றது. 15



**முச்சந்தி முரளி**

"புத்தரை வைச்சு காணிபிடிச்ச காலம் போய் இப்ப தென்னம்பிள்ளையை வைச்சும் காணி பிடிக்கினம் பாருங்கோ"

## கொரோனாத் தொற்றால் 18 பேர் சாவு

கொழும்பு, ஒக்.25

கொரோனாத் தொற்றால் நாட்டில் நேற்றுமுன்தினம் மேலும் 18 பேர் உயிரிழந்துள்ள 15

## சீருடை கட்டாயம் இல்லை

கொழும்பு, ஒக்.25

நாட்டில் ஆரம்பப் பாடசாலைகள் இன்று ஆரம்பிக்கவுள்ள நிலையில், மாணவர்களின் சீருடை தொடர்பில் 15

## கர்ப்பிணிப் பெண்களுக்கு வடக்கில் அங்கர்

**கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கை**

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு மாகாணத்திலுள்ள சகல கர்ப்பிணிகளுக்கும் தலா இரண்டு அங்கர் பெட்டிகள் (400 கிராம்) வீதம் விலை அதிகரிப்புக்கு முன்னர் 15



## பத்துக் கிலோ கஞ்சாவுடன் 18 வயது இளைஞன் கைது

மன்னார், ஒக்.25

மன்னார், தாழ்வுப்பாடு பகுதியில் 10 கிலோ கஞ்சாவுடன் 18 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மன்னார் பொலிஸார். தெரிவித்தனர். மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இர 15

## பால் பதனிடும் நிலையத்துக்காக யாழ்ப்பாணத்துக்கு வரவிருந்த 450 மில். ரூபா நழுவும் அபாயம்

**ஆளுநரின் தலையீட்டை கோரும் பால் பண்ணையாளர்கள்**


யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு பால் பதனிடும் நிலையம் அமைப்பதற்கு கிடைக்கவிருந்த 450 மில்லியன் ரூபா நிதி கால்நடைத் திணைக்கள அதிகாரிகள் சிலரின் பொறுப்பற்ற செயற்பாட்டால் கைநழுவிப் போகும் அபாயம் 15

## நெடுந்தூர சேவையை ஆரம்பித்தது இ.போ.ச.

யாழ்ப்பாணம், ஒக்.25

அத்தியாவசிய சேவைகளின் பொருட்டு வெளிமாவட்டங்களுக்குச் செல்கின்ற உத்தியோகத்தர்களின் நன்மை கருதி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான நெடுந்தூர சேவைகள் ஆரம்பிக்கப் 15



## வங்கக் கடலில் தாழமுக்கம்

**இன்று அல்லது நாளை உருவாகலாம்**

யாழ்ப்பாணம், ஒக். 25

தென் மேற்கு வங்கக்கடலில் இன்று அல்லது நாளை தாழமுக்கம் ஒன்று உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படு 15

## உள்ளூர் பஸ் சேவை நேரத்தை நீடிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்ப்பாணத்தில் உள்ளூர் பஸ் சேவைகளை இரவு 9 மணிவரை நீடிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. 15

## மாவிட்டபுரத்தில் திருக்குறள் வளாகம்

யாழ்ப்பாணம், ஒக்.25

மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மாவை ஆதீனகர்த்தாவின் ஆசியுடன் இன்று மு.ப. 10 மணிக்கு கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடை 15

## நல்லூர் முருகன் ஆலயத்தின் நிர்வாக அதிகாரி பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஒக்.25

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பதினொ 15

## தென்னம்பிள்ளைகளை நட்டு காணி பிடிக்கிறது இராணுவம்!

**வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் கண்டனம்**

யாழ்ப்பாணம், ஒக். 25

வலி. வடக்கில் மக்களின் காணிகளை ஆக்கிரமித்துள்ள இரா 15



# எரிபொருள்களின் விலை விரைவில் எகிற வாய்ப்பு

**கொழும்பு, ஒக். 25**

**ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 20 ரூபாவாலும், ஒரு லீற்றர் டீசலின் விலையை 30 ரூபாவாலும் அதிகரிக்குமாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவைக் கோரியுள்ளோம் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாலும், லங்கா ஐ.ஓ. சி. நிறுவனம் எரிபொருளின் விலையை 5 ரூபாவால் அதிகரித்துள்ளதாலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நலனைக் கருத்தில்கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

பல்வேறு காரணிகளால் கூட்டுத்தாபனம் நட்டமடைந்துள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இலங்கை வங்கிக்கும், மக்கள் வங்கிக்கும் சுமார் 652 பில்லியன் கணக்கில் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் எரிபொருள் விலையேற்றத்தை அதிகரிப்பதை தவிர்ந்த பிறிதொரு தீர்வு கிடையாது.

பெற்றோல் ஒரு லீற்றரின் விலையை 20 ரூபாவாலும், டீசல் ஒரு லீற்றரின் விலையை 30 ரூபாவாலும் அதிகரிக்குமாறு அமைச்சரிடம் யோசனை முன்வைத்துள்ளோம். அல்லது விலை அதிகரிக்காமல் இருக்க வேண்டுமாயின் நெருக்கடி நிலையை சமாளிக்க திறைசேரி ஊடாக நிதி வழங்கப்பட வேண்டும்.

இவ்விரு தீர்மானங்களில் ஒன்றை கட்டாயம் விரைவில் செயற்படுத்த வேண்டும் -என்றார். (ம)

## கஜேந்திரன் எம்.பிக்கு கொரோனாத் தொற்று!

கொழும்பு, ஒக். 25

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் முடிவு நேற்று வெளியானது. அதில் அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டது. (ம)

### சகல பாடசாலைகளிலும்

## ஆரம்பப் பிரிவுகள் இன்று ஆரம்பம்

### தரம் - 5, உயர்தரப் பரீட்சைகள் மேலும் பின்தள்ளப்பட வாய்ப்பு

கொழும்பு, ஒக். 25

நாடு முழுவதுமுள்ள சகல ஆரம்பப் பிரிவு பாடசாலைகளும் ஏனைய பாடசாலைகளிலுள்ள ஆரம்பப் பிரிவுகளும் கல்விச் செயற்பாடுகளுக்காக இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளும் முழுமைசெய்யப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார்.

ஆரம்பப் பிரிவுகளைக்கொண்ட பாடசாலைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்படவுள்ளனவா அல்லது சகல பாடசாலைகளிலும் உள்ள ஆரம்பப் பிரிவுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளனவா என்பது தொடர்பில் காணப்பட்ட தெளிவின்மைக்கு விளக்கமளிக்கும் போதே மேலதிக செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நவம்பரில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு தொடர்ச்சியாக, முறையாக கல்வி கற்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கப் பெறவில்லை. எனவே, அவர்களுக்கான பாடத்திட்டங்களை நிறைவு செய்ய வேண்டிய தேவையும் காணப்படுகிறது. எனவே, ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில்கூட இந்தப் பரீட்சைகள் நடைபெறுமென்பது சந்தேகமே. அவை பிற்போடப்படக் கூடிய வாய்ப்புக்களே அதிகமுள்ளன. - என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-இ)




## விரைவில் மாபெரும் போராட்டம்

கொழும்பு, ஒக். 25

யுகதனவி மின்நிலைய ஒப்பந்த விவகாரம், கொழும்புத் துறைமுகத்தின் 13 ஏக்கர் நிலப்பரப்பை சீன நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானம் ஆகியவற்றை அரசு கைவிட வேண்டும்.

இல்லாவிடின் எதிர்வரும் வாரம் முதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என துறைமுகம், மின்சாரம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் ரஞ்சன் விஜயலால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானத்துக்கு எதிராக பேராயர் கர்தினால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்துள்ளமைக்கு நன்றி. தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு வழங்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அத்துடன் கொழும்புத் துறைமுகத்துக்கு சொந்தமான 13 ஏக்கர் காணியை சீன நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கொழும்புத் துறைமுகத்துக்குள் சீனாவின் ஆதிக்கம் எல்லை மீறியுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பெரும் பாதிப்புக்களை எதிர்க்கொள்ள நேரிடும்- என்றார். (ம)

### யுகதனவி மின் உற்பத்தி நிலையம்

## அரச கூட்டணிக்குள் உச்சக்கட்ட மோதல்

கொழும்பு, ஒக். 25

'கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. குறித்த நிலையத்தின் பங்குகளை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்குவதை நாம் எதிர்க்கின்றோம். ஜனாதிபதி எம்மைச் சந்திக்காவிட்டால் பரவாயில்லை. மக்களுடன்தான் எமக்கு கொடுக்கல் வாங்கல்' இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார நேற்று அறிவித்தார்.

யுகதனவி மின்உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பில் கொழும் பில் நேற்றுகூடி, பங்காளிக் கட்சிகள் ஆராய்ந்தன.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் வாசு மேற்கண்டவாறு கூறினார்.

'ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் ஏன் இன்னும் எதிர்ப்பு?'

என எழுப்பபட்ட கேள்விக்கு, 'இல்லை. இன்னும் இறுதி முடிவு இல்லை. அரசியல்தான் எல்லாவற்றையும் தீர்மானிக் கும். நாம் எதிர்ப்பு.' என்று அமைச்சர் வாசு குறிப்பிட்டார். அத்துடன், பங்காளிக்கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி மறுப்பு தெரிவித்துள்ளமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு, 'சந்திக்க விருப்பமில்லையெனில் பல வந்தமாகச் சந்திக்க முடியாது. நாம் மக்களுடன் கலந்துரையாடுவோம்'- என்றார். (ம-44)

## திரவ உர இறக்குமதியில் பெருமளவான நிதிமோசடி!

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 24

திரவ நனோ நைட்ரஜன் உர இறக்குமதியின் மூலம் பெரிய நிதிமோசடி இடம்பெற்றிருக்கின்றது. இத்தகைய நிதிமோசடியில் ஈடுபடுவதற்காகத்தான் இரசாயன உர இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதா? என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு நாடுகளுக்கு இடையிலான கொடுக்கல், வாங்கல்களின்போது ஒரு நாட்டிலிருந்து மற்றைய நாட்டின் அரசுக்கோ அல்லது அரசுக்குச் சொந்தமான கட்டமைப்புக்கோ நிதி மாற்றம்செய்யப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்க விடயமாகும். ஆனால் இந்த விவகாரத்தில் 29 கோடி ரூபா பணம் தனியார் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டிருக்கின்றது. எவருடைய உத்தரவின்பேரில் இவ்வாறு நிதி மாற்றம் செய்யப்பட்டது? இத்தகைய நிதிமோசடியில் ஈடுபடுவதற்காகத்தான் இரசாயன உர இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதா? இந்த விவகாரம் தொடர்பில் உடனடியாக சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாடளாவிய ரீதியிலுள்ள விவசாயிகள் கடந்தகால நிலைவரங்களையும் தற்போதைய நிலைவரங்களையும் ஒப்பீடுசெய்து பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. தமது தலைவிதி இப்போது எவ்வாறு மாற்றப்பட்டிருக்கின்றது? என்பது குறித்து விவசாயிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான இரசாயன உரம், கிருமிநாசினிகள் உள்ளிட்டவற்றின் இறக்குமதியைத் தடைசெய்துவிட்டு இப்போது விவசாயத்தில் ஈடுபடுமாறு விவசாயிகளுக்கு அரசாங்கம் உத்தரவிடுகின்றது.

69 இலட்சம் மக்களின் வாக்குகள் மூலம் ஆட்சிபீடமேறிய அரசாங்கம், தற்போது நாட்டில் பேரழிவை ஏற்படுத்திவருகின்றது. எனவே நீண்ட வரிசைகளில் நிற்கும் யுகத்தை மீண்டும் தோற்றுவிப்பதற்காகவா எம்மைத் தோற்கடித்து இந்த அரசாங்கத்தை ஆட்சிபீடமேற்றினீர்கள்? என்று தற்போதைய அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்களிடம் கேள்வியெழுப்ப விரும்புகின்றோம்- என்றார். (ம)

# பிற்பகல் 1.30க்குப் பின்னர் அதிபர்கள் பொறுப்பல்லர்!

## அதிபர் - ஆசிரிய முன்னணி கல்வி அமைச்சுக்குக் கடிதம்

**கொடிகாமம், ஒக். 25**

**ஆசிரியர், அதிபர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தொழிற்சங்க நடவடிக்கையின் அடுத்த கட்டம் குறித்து ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க முன்னணி கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் 16 தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்களின் கையொப்பத்துடன் கல்வி அமைச்சின் செயலாளருக்கு நேற்றுக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தொழிற்சங்கக் கூட்டணி குறிப்பிட்டுள்ளது.

ஆசிரியர், அதிபர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் போராட்டத்தின் கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரையில் இன்று தொடக்கம் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் மற்றும் அதிபர்கள் கடமைகளுக்காக தங்களுடைய தனிப்பட்ட தொடர்பாடல் உபகரணங்களை பயன்படுத்துவதைத் தவிர்ப்பது, காலை 7.30 மணி முதல் பி.ப. 1.30 வரை மாத்திரம் அதிபர்கள் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாத்திரமே மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்புடையவராதல், வசதிகள் ஏற்படுத்தப்படும் வரையில் இணையவழி கற்பித்தலிலிருந்து விலகி இருத்தல், ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், அரச விடுமுறை தினங்களிலும் கடமைகளில் ஈடுபடாதிருத்தல், ஆசிரியர் மற்றும் அதிகாரிகள் வார நாள்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை கற்பித்தல் நடவடிக்கைகள் மாத்திரம் ஈடுபடல்- போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜயசிங்க உள்ளிட்ட 16 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர். (த-இ)

---

இன்று தொடக்கம்

# அதிபர்களும் ஆசிரியர்களும் 'சட்டப்படி வேலை' போராட்டம்

கொடிகாமம், ஒக். 25

சம்பள முரண்பாட்டுக்கு அரசு தீர்வு தரும்வரை அதிபர், ஆசிரியர்கள் சட்டப்படி கடமையாற்றுவர் என்று அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க முன்னணி அறிவித்துள்ளது.

சகல ஆரம்பப் பாடசாலைகளும் ஏனைய பாடசாலைகளிலுள்ள ஆரம்ப பிரிவுகளும் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தபோதும், கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்க முன்னணி பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

இன்று திங்கட்கிழமை பாடசாலைக்குச்செல்வோம் என்று கடந்த வார இறுதியில் அறிவித்திருந்தது. இந்தநிலையில், இன்று தொடக்கம் சட்டப்படி வேலை போராட்டத்தை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

மாணவர்களின் கல்வி இரண்டு வருடங்களுக்கும் மேலாக பாதிப்படைந்ததால் பாடசாலைக்கு செல்வதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், 'சட்டப்படி வேலை' என்ற வகைப்பாட்டிலிருந்தபடி போராட்டம் தொடரும் என்று தொழிற்சங்க முன்னணி அறிவித்துள்ளது.

அதன்படி, இன்று திங்கட்கிழமை தொடக்கம், நிகழ்நிலை (ஒன்லலன) மூலமான கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருத்தல், சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் உத்தியோகபூர்வ கடமைகளைச் செய்யாதிருத்தல், கடமை நாள்களில் காலை 7.30 மணிக்கு முன் அல்லது பி.ப. 1.30 மணிக்கு பின்னர் உத்தியோக பூர்வ கடமைகளைச் செய்யாதிருத்தல், சுகாதார நலன்பேண் விடயங்களை செய்யாதிருத்தல், மாணவர்களுக்கு அடையாள அட்டைகளை செய்யாதிருத்தல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகளைத் தவிர்த்தல், பிற்பகல் 1.30க்குப் பின்னர் ஆசிரியர் கலந்துரையாடல்கள், அதிபர் கூட்டங்கள் அல்லது வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்தல், கருத்தரங்குகளில் பங்குபற்றுவதைத் தவிர்த்தல், தரநிலை 8 இன்படி கடமை செய்யாதிருத்தல், வருடாந்த மற்றும் ஐந்தாண்டு திட்டமிடல் செயற்பாடுகளை தவிர்த்தல், பொருள்கள் கணக்கெடுப்பு மற்றும் கணக்காய்வு கடமைகளைச் செய்யாதிருத்தல், பாடசாலை முடிவடைந்த பின்னர் கடமைகளில் ஈடுபடுதலைத் தவிர்த்தல், பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டங்கள் நடத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். - என்று முன்னணி அறிவித்துள்ளது. (த-159)

---

# மன்னார் விவசாயிகள் இன்று போராட்டம்

*சார்ள்ஸ் எம்.பி. அழைப்பு*

மன்னார், ஒக். 25

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 174 கமக்கார அமைப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தினர் இன்று திங்கட்கிழமை முற்பகல்10 மணிக்கு மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

போராட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அழைப்பு விடுத்துள்ளார். குறித்த போராட்டமானது மன்னார் உயிலங்குளம் கமநல சேவை திணைக்களத்தின் முன்பாக நடைபெறவுள்ளது.

'தற்போது காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ளது. அரசின் திட்டமிடாத நடவடிக்கை காரணமாக இந்த நாட்டில் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த அரசு உடனடியாக விவசாயிகளுக்கு உரத்தை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தி குறித்த போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். (த-56)

---




**முந்தநாள் பேப்பரில ஒரு செய்தி பாத்திருப்பியள். பள்ளிக்கூடங்களை விட்டு நிண்ட பிள்ளையளுக்கு பைஸர் ஊசி போடுறதுக்கு காசொண்டும் கட்டத் தேவையில்லை எண்டதுதான் அந்தச் செய்தி. அப்பிடி ஆரும் காசு கேட்டால் தனக்கு முறையிடச் சொல்லி சுகாதாரப் பணிப்பாளரே அறிவிச்சிருக்கிறார். அப்பிடி அவரே சொல்லுறார் எண்டா அதுக்குப் பின்னால ஏதும் இருக்கத்தானே வேணும்.பட்சி படக்கெண்டு பறந்து போய் ஆராயாம இருக்குமோ? அப்பிடி ஆராய்ஞ்சதில சில விசயங்கள் சிக்கத்தான் செய்திச்சு.**

**உடுவில், தெல்லிப்பழை பக்கங்களில இருக்கிற பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு ஊசி போடுற இடங்களுக்கு பள்ளிக்கூடங்களை விட்டு விலகின ஆக்களும் போயிருக்கினம். பொதுவா பள்ளிக்கூடத்தை விட்டு நிண்ட யாழ்ப்பாணத்து இளம் பிள்ளையளின்ர அடுத்த திட்டம் வெளிநாடு தானே. வெளிநாடுகளுக்கு போறதெண்டா சினோபார்ம் ஊசி போட்டால் சரிவராது. பைஸர் ஊசி போட்டவையைத்தான் கனக்க நாடுகள் உள்ளுக்க வர விடுகுதுகளாம். அதால இந்தச் சாட்டோட போய் பைஸரைப் போடுவம் எண்டு பள்ளிக்கூடத்தை விட்டி விலகின இளம்தரவளியள் 'நாங்கள் பள்ளிக்கூடத்தில படிக்கிறவைதான்' ஊசி போடப் போயிருக்கினம்.**

**அங்க ஊசி போட நிண்ட சிலருக்கு வந்த ஆக்களின்ர நோக்கம் என்னெண்டு வடிவாத் தெரிஞ்சிருக்கு. வலிய வாற சீதேவியை எதுக்கு காலால தட்டி விடுவான்? எண்ட நினைப்பில அவையைத் தனியக் கூட்டிக் கொண்டு போய் 'டீல்' பேசியிருக்கினம்.**

**இது தனிய பள்ளிக்கூடத்தில படிக்கிறவைக்கு மட்டும் தான் போட வந்திருக்கு. இடைவிலகின ஆக்களுக்கு போட அனுமதி இல்லை. ஆனா் உங்களுக்காக அதைப் போடலாம். கொஞ்சம் காசு செலவாகும் எண்டு பாணியைப் போட , அதுக்கு ஊசி போட வந்தவையும் ஓமெண்டு தலையாட்டி இருக்கினம். இப்பிடி கொஞ்சப் பேரிட்ட 15 ஆயிரத்தில இருந்து 20 ஆயிரம் வரை வாங்கினதாய் கேள்வி. இப்பிடி பள்ளிக்கூடத்தால நிண்ட சிலர் பைஸர் போட்டுட்டு வந்ததைப் பார்த் திட்டு , அக்கம் பக்கத்தில இருக்கிற இடைவிலகின ஆக்களும் ஊசி போட போயிருக்கினம். ஆனால் அவைக்கு காசு குடுத்துதான் முதல் வந்தவை ஊசி போட்டதெண்டு தெரியாது. இலவசமாக ஊசி போடலாமெண்டு போனவைக்கு அங்க நிண்டவை 'ஊசி போட ஏலாது' எண்டு சொல்லிட்டினம். அதுக்கு இவை "பக்கத்து வீட்டுப் பெடியனுக்கு போட்டனியள். ஏன் எங்களுக்கு போட ஏலாது?" எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு ஏதேதோ சாட்டுகள் சொல்லி அனுப்பிட்டினமாம் ஊசி போடுறதுக்கு பொறுப்பான ஆக்கள்.**

**பிறகுதான்'காசு குடுத்தாத்தான் பைஸர் ஊசி'எண்ட விசயம் கனபேருக்கு தெரிய வந்திச்சாம். அதைப் பற்றி சுகாதாரப் பணிப்பாளருக்கு சொல்லப் போகத்தான் அவரும் "அப்பிடியில்லை, இடை விலகின ஆக்களுக்கும் இலவசமாய் பைஸர் போடலாம், ஆரும் காசு கேட்டால் கொம்பிளைண்ட் தந்தால் அக்சன் எடுப்பம்" எண்டு சொல்லியிருக்கிறார்.**

**ஊசியைக்கூட காசாக்கிற வித்தையை எங்கட ஆக்களிட்டத்தான் படிக்கோணும்.**



**- பட்சி**

# வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை அரசு!

## மக்களை ஓரணியில் திரட்டுகின்றது ஐ.ம.ச



**கொழும்பு, ஒக். 25**

**‘ராஜபக்ச அரசு, இந்த நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் இதுவரை நிறைவேற்றவில்லை. இப்படிப்பட்ட அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஓரணியில் களமிறங்க வேண்டும்**

இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

‘பெரும்போகம் ஆரம்பமாகி ஒரு மாதமும் சில நாள்களும் கடந்துள்ளன. எனினும், அரசானது பெரும்போகத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக்கொடுப்பதில் அசமந்த நிலை உள்ளது.

இரசாயன உரப்பயன்பாட்டிலிருந்து காபனிக் உரப் பயன்பாட்டுக்கு மாற வேண்டும் என்று வர்த்தமானியை வெளியிட்ட அரசு, இன்று சகல விவசாயிகளையும் பெரும் பிரச்சினைக்குள் தள்ளியுள்ளது.

இந்தியாவிலிருந்து உரத்தைக் கொண்டு வருவதாகக் கூறிய அரசு, தற்போதைய நிலையில் அங்கிருந்து உரத்தை இறக்குமதி செய்துள்ளது. விமானத்தின் மூலம் ஒரு லட்சம் மெற்றிக் தொன் உரத்தைக் கொண்டு வருவதாக விவசாய அமைச்சர் கூறியிருந்தார். எனினும், 25 ஆயிரம் மெற்றிக் தொன் உரமே கொண்டுவரப்பட்டுள்ளது என அமைச்சர் கூறியுள்ளார். நாட்டிலுள்ள சகல விவசாயிகளையும் எடுத்துக் கொண்டால், 30 இலட்சம் தொன் உரம் தேவையாகவுள்ளது. எனினும், 25 ஆயிரம் தொன் உரமே கொண்டுவரப் பட்டுள்ளது. அரசு சொல்வதைச் செய்வதில்லை. செய்வதைச் சொல்வதில்லை’ -என்றார். (ம-22)

# செல்வம் அடைக்கலநாதனுக்கு எந்தவித அருகதையும் இல்லை!

## மறவன்புலவு சச்சிதானந்தன் கண்டனம்

கொடிகாமம், ஒக். 25

“திருக்கேதீஸ்வர வளைவு உடைக்கப்பட்டபோது நாடாளுமன்றத்தில் மௌனமாகஇருந்த செல்வம் அடைக்கலநாதன், மடு தேவாலயத்துக்கு அண்மித்த விவசாயிகளின் வேளாண் பயிர் நிலச் சிக்கல் தொடர்பில் ஞானசாரதேரர் கருத்துக் கூறுவதைப்பற்றி விமர்சிக்கின்றார்.

அவ்வாறு விமர்சிப்பதற்கு, செல்வம் அடைக்கலநாதனுக்கு எந்தவித அருகதையும் இல்லை” என்று மறவன்புலவு சச்சிதானந்தன் கண்டனம் தெரிவித்தார்.

செல்வம் அடைக்கலநாதனின் கல்விப் பின்னணியும் அறிவுப் பின்னணியும் பொருத்தமற்ற கருத்துக்களைத் தமிழ் மக்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் பேசவைத்துள்ளது.


இது, தமிழ் மக்களின் அறிவார்ந்த மதிப்பைக் குறைக்கும் உரையாகவுள்ளது. அதற்காக மனம் வருந்துகிறேன்.

கந்தையா வைத்தியநாதன் குடும்பத்தாரின் நிலத்தில் புத்தவிகாரையை அமைத்ததாகச் செல்வம் அடைக்கலநாதன் கூறுகிறார்.

கந்தையா வைத்தியநாதன் வாழ்ந்த காலத்திலேயே அந்தக் காணியில் வெதுப்பகம் ஒன்றை அவர் நிறுவினார். அதற்காகச் சிங்கள- பௌத்த குடும்பம் ஒன்றை அங்கு கொண்டுவந்தார்.

சிங்கள -பௌத்த குடும்பம் அந்த நிலத்தில் அரச மரத்தடியில் புத்தரை வைத்து வழிபட்டு வந்தது. அந்த அரசமரம் இப்பொழுதும் அங்கே இருக்கிறது. போர்க்காலத்தில் படைவீரர்கள் அந்தப் புத்த கோவிலைச் சிறிதளவு விரிவாக்கினார்கள்.

இப்பொழுது அந்த வளாகத்தில் அமைந்துள்ள புத்த விகாரைக்குள் சிவ



லிங்கம் திருமால், பிள்ளையார், முருகன், கலைமகள், திருமகள், வெற்றிமகள் ஆகிய சைவ கடவுள்களின் மூர்த்தங்கள் உள்ளன.

அந்த மூர்த்தங்களைச் சைவர்கள் சென்று வழிபட எவ்விதத் தடையும் இல்லை.

அரசு காணியையும் தனியார் காணியையும் பாலாவிக் கரையையும் அடாத்தாகக் கைப்பற்றிய கத்தோலிக்க மன்னார் ஆயரைக் குறை சொல்வாரா செல்வம் அடைக்கலநாதன்? -என்று மறவன்புலவு சச்சிதானந்தன் கேள்வியெழுப்பியுள்ளார். (து-159)

# அரசின் அசண்டையீனத்தாலேயே உரம் பெறுவதில் பிரச்சினைகள்

## மைத்திரி விளாசல்

கொழும்பு, ஒக். 25

உரப்பிரச்சினையில் எனது கருத்துக்களை அரசு கணக்கிலெடுக்காததாலேயே இவ்வளவு சிக்கல்கள் உருவாகியுள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சராக, ஜனாதிபதியாக இருந்த நேரத்தில் சேதனப்பசளையை ஊக்குவிக்கும் நோக்கில் பல திட்டங்களை மேற்கொண்டுவந்தேன். இருந்தும் உடனடியாக சேதனப்பசளையை மாத்திரம் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை இலகுவில் செய்துவிட முடியாது - என்றார். (ம)

# நுவரெலியாவில் கனமழை விவசாய நிலங்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக். 25

சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா நகரில் வர்த்தக நிலையங்களும், விவசாய நிலங்களும் அதிகமாகப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் மாலை பெய்த கடும்மழையால் நுவரெலியா கந்தபளை பிரதேசத்தில் அதிகமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (ம)

# தென்மராட்சி பாடசாலைகளில் இன்றுமுதல் பைசர் தடுப்பூசி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் 16, 17 வயதுடைய மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி இன்று தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரை பாடசாலைகளில் அமைக்கப்படும் நிலையங்களில் ஏற்றப்படும் என சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி இன்று நாவற்குழி மகா வித்தியாலயத்தில், நாவற்குழி மகா வித்தியாலயம் மற்றும் மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கும், கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில், கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி. , கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை , கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, கைதடி நவீல்ட் பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கும், நாளை 26ஆம் திகதி மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலயம், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், ஆகியவற்றின் மாணவர்களுக்கும்

நாளை மறுதினம் 27ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, அல்லாரை அ.த.க.பாடசாலை, கொடிகாமம் அரசினர் வித்தியாலயம், வரணி மத்திய கல்லூரி, கச்சாய் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களுக்கும், எதிர்வரும் 28 ஆம் திகதி உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம், மிருசுவில் அ.த.க.பாடசாலை, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை, மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கும், எதிர்வரும் 29 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி , மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களுக்கும், எதிர்வரும் 30 ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரியில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், மந்துவில் றோ.க.த.க.பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# நீதி கிடைப்பதற்கு வத்திக்கான் துணை

## பேராயர் மல்கம் ரஞ்சித் நம்பிக்கை

கொழும்பு: ஒக். 25

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் வத்திக்கான் தனது முழு ஆதரவை வழங்கும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வத்திக்கான் பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு கடிதத்தில், வத்திக்கான் இலங்கையின் செயல்முறையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், அது இலங்கை மக்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார். (ம)

## வவுனியா வடக்கில்

# 1305 ஏக்கர் வயல்காணிகளை விடுவிக்குமாறு கோரிக்கை


வவுனியா,ஒக்.25

வவுனியா வடக்கு, முத்துமாரி நகரில் 135 ஏக்கர் வயல் காணியை விடுவிக்குமாறு, வனவளத்துறை அமைச்சரிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வனவளத்துறை அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் வனவளத்துறை அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (ஓ-418)

# இரண்டு சட்டங்கள் உள்ளன அவற்றை செயற்படுத்துங்கள்

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வலியுறுத்து



**யாழ்ப்பாணம், ஒக். 25**

**“உங்கள் அரசியலை குப்பையில் போடுங்கள். சட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டு இங்கு வந்து பேசுங்கள். அத்துமீறி மீன்பிடிப்பது தொடர்பாக இரண்டு சட்டங்கள் காணப்படுகின்றன. அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்” என்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

**சொல் கேட்கிறார்களில்லை**

எமது கடற்பரப்புக்குள் மீண்டும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் ஆரம்பித்துள்ளது. எங்கள் கடற்பரப்புக்குள் வரவேண்டாம் என்று சொல்லியும் கேட்கின்றார்களில்லை.

**நிவாரணம் வழங்குங்கள்**

அத்துமீறும் படகுகளை அரசுடமையாக்கி அதன் மூலம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நிவாரணங்களை வழங்க வேண்டும்.

**இரு தரப்பினரதும் உயிர் ஒன்றுதான்**

எங்கள் கடற்பரப்புக்குள் அத்துமீறி வருபவர்களை ஏன் இந்திய அரசு பார்த்துக் கொண்டு இருக்கிறது என்று எமக்குப் புரியவில்லை. உங்கள் கடல் வளங்கள் முழுவதையும் அழித்து விட்டார்கள். மனச்சாட்சி இல்லாமல் எங்களுடைய வளங்களையும் அழிக்க முற்படுகின்றார்கள். எங்கள் உயிர் போனாலும் சரி தமிழ்நாட்டு மீனவர்கள் உயிர் போனாலும் சரி எல்லாமே ஒன்றுதான்.

**இழப்பீட்டைக் கழித்து மிகுதியைத் தாருங்கள்**

இந்திய மீனவரின் உயிரிழப்புக்கு ஒருகோடி ரூபா இழப்பீடு கோரப்படுகிறது. இந்திய இழுவை படகுகளால் நாங்கள் பல கோடிகளை இழந்திருக்கிறோம். உங்கள்இழப்பீட்டை கழித்துக் கொண்டு மீதியை எமக்குத் தாருங்கள்.

எங்கள் விடயத்தை அரசியலுக்குள் புகுத்த வேண்டாம். ஜனாதிபதி, பிரதமர் கடற்றொழில் அமைச்சரிடம் நாங்கள் கோருவது என்னவென்றால், எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைபவர்களையும் சட்டவிரோதமான தொழிலையும் அனுமதிக்க வேண்டாம். அவற்றுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றார்.

**முதலமைச்சரால் தடுக்கமுடியும்**

இதன்போது கருத்து தெரிவித்த கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உப தலைவர் வீ.அரிகிருஷ்ணன், அத்துமீறுபவர்களை தடுக்க முற்பட்டோம். ஆனால் முடியாமற் போய்விட்டது. இனி மேலும் இந்த இழுவைப் படகுகளை எங்கள் எல்லைக்குள் விட வேண்டாமென தமிழக முதலமைச்சரிடம் கேட்டுக் கொள்கின்றோம். அவர் நினைத்தால் கட்டுப்படுத்த முடியும் -என்றார். (து-இ)

# டக்ளஸின் செயற்பாடு கண்டனத்துக்குரியது!

## கடற்றொழில் இணையம் விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 25

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எங்களைக் கொன்றொழித்த, யுவதிகளை கற்பழித்த, சொத்துக்கள், உடைமைகளைச் சூறையாடியவர்களின் பக்கமாக நின்றுகொண்டு போராட்டங்களைக் கொச்சைப்படுத்துகிறார். நாங்கள் இதனைக் கண்டிக்கின்றோம். அவருடைய செயற்பாடு மிகவும் கேவலமானது.

இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழில் இணையத்தின் தலைவர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,யாழ்ப்பாணத்தில் மீனவர் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டமானது எவருடைய இலாபத்துக்கோ அல்லது கட்சியின் இலாபத்துக்கோ செய்திருந்தாலும் கூட மீனவர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு இருக்கின்றார்கள்.


இந்தப் போராட்டங்கள் வெற்றிபெறும் நம்பிக்கையோடு நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். போராட்டம் பற்றி டகளஸ் அண்மையில் சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களுடைய குறிப்பாக யாழ்ப்பாண மக்களுடைய வாக்குகளில் நாடாளுமன்றம் சென்றவர். இலங்கையின் பேரினவாத அரசும், தமிழின அழிப்பை ஓர் அழியாத நிகழ்ச்சி நிரலாக வைத்துக்கொண்டிருக்கின்றது. அவ்வாறான அரசுக்கு ஆதரவாக இருந்துகொண்டு அவர்களுக்கு அடிவருடியாகக் கப்பம் பெற்றுக்கொண்டு அவர்களிடம் பிச்சைபெற்று எங்களுக்கு கஞ்சி ஊற்றுவதானது, கொத்தடிமைகளுக்கு கஞ்சி ஊற்றுவது போலத்தான் நினைக்கின்றேன்.

எங்களுடைய போராட்டம் தமிழ்நாட்டில் இருக்கின்ற 25 வீதமான சட்டவிரோத தொழில் செய்கின்ற மீனவர்களுக்கு எதிரான போராட்டமேதவிர, இந்தியாவில் இருக்கின்ற 8 கோடி மக்களுக்கும் எதிரான போராட்டம் அல்ல என்பதை உணர்ந்து கொண்டு டக்ளஸ் தேவானந்தா இந்தப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்க வேண்டும்-என்றார். (து-319)

# வடக்கின் புதிய ஆளுநரால் நிரந்தர நியமனம் கிடைக்கும்

## சுகாதாரத் தொண்டர்கள் நம்பிக்கை



வடக்கு மாகாணத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் எமக்கு நிரந்த நியமனத்தைப் பெற்றுக் கொடுப்பார் என நம்புகின்றோம் என்று சுகாதாரத் தொண்டர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

வடமாகாண ஆளுநரின் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் தமது நியமனத்துக்காகத் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வரும் சுகாதாரத் தொண்டர்களை, ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தார்.

இது தொடர்பில் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவிக்கையில்;

ஆளுநர் ஜீவன் தியாகராஜா, தகரக் கொட்டகைக்குள் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்த எம்மைச் சந்தித்தார்.

எங்கள் பிரச்சினை தொடர்பில், தான் யாழ்ப்பாணம் வந்தவுடனே அறிந்தேன் என்றார். நியமனம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் அவரிடம் கையளித்தோம். நீங்கள் போராட்டம் செய்யாதீர்கள் நான் உங்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பேன் என்றார். அவர் சொன்ன வார்த்தைகள் எமக்கு நம்பிக்கை தருகின்றது.

உங்களுக்கு நியமனத்தைப் பெற்று தராவிட்டால் நீங்கள் எனது அலுவலகத்துக்குள் வந்து போராட்டத்தை நடத்த முடியும் என்றும் அவர் எம்மிடம் தெரிவித்தார்.

நாம் தொடர்ச்சியாக எட்டு மாதங்களுக்கு மேலாக நிரந்தர நியமனம் கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தி வருகிறோம்.

முன்பு பதவி வகித்த வடக்கு ஆளுநர் தமது அதிகாரத்துக்கு உட்பட்டு சுகாதாரத் தொண்டர்களின் நியமனத்தைச் செய்ய முடியாது என்று கைவிரித்தார். தற்போது புதிய ஆளுநரின் வார்த்தைகள் எமக்கு நம்பிக்கை தந்துள்ளன.-என்றனர். (ஒ-4-20)

# கசிப்புக் காய்ச்சிய நபர் கோடாவுடன் கைதானார்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடுப் பகுதியில் இரகசியமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் சுற்றிவளைத்து ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

அதன்போது, ஆயிரத்து 620 லீற்றர் கோடா, வடித்த நிலையில் காணப்பட்ட 120 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணம் என்பவற்றை பொலிஸ் அதிரடிப்படையினர் கைப்பற்றினர். (து-113)

# தொழிற்கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.25

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் இரண்டாம் கல்வியாண்டு தொழிற்கற்கைநெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கடல் உணவுத் தொழில்நுட்ப டிப்ளோமா, நீரில் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவ டிப்ளோமா, நீரில் வளர்ப்பு தொழில்நுட்பவியலாளர், வெளி இணைப்பு இயந்திர பொலிவலர், கடலக மாலுமி, ஆழ்கடல் சுழியோடி, உயிர் பாதுகாப்பு, அலங்கார மீன்வளர்ப்பும் முகாமைத்துவமும், நீச்சல், கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிநெறிகளுக்கு க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கற்கைநெறிகளை கற்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழக அலுவலகத்தில் பெற்று, எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் விண்ணப்பங்களை வட்ஸ்அப் 0762939888 எனும் தொலைபேசி ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஊடகவியலாளர் மீதான விசாரணைக்கு கண்டனம்

மக்களுக்காகச் செயற்பட்டு வரும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் பயங்கரவாத விசாரணைப்பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றமையைக் கண்டிக்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்காக குரல்கொடுத்தும், தம்மாலான பணிகளைச் செய்தும் வருகின்ற ஊடகத்துறையினரை தமது புலனாய்வாளர்களைவைத்து, உள ரீதியாக தாக்கத்துக்கு உள்ளாக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ள அரசு அதற்காக பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவை பயன்படுத்துக்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது -என்று தெரிவித்துள்ளார். (து-110)

## துணுக்காய் பிரதேசத்தில் நடமாடும் காணிச் சேவை

முல்லைத்தீவு, ஒக்.25

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலகத்தில் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகளுக்கான நடமாடும் சேவை கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடந்த பத்தாண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் தீர்க்கப்படாத பல காணிப் பிணக்குகள் காணப்படுகின்றன. போர்ச் சூழல் காரணமாக காணிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் புதிய நபர்கள் இதனைப்பயன்படுத்தி காணிக்கான புதிய ஆவணங்களைப் பெற்றமை, ஒரு காணிக்கு இரு ஆவணங்கள் மற்றும் காணிக்கான ஆவணங்களை இழந்தமை போன்ற பல்வேறு காரணங்களால் காணிப் பிணக்குகள் தீர்க்கப்படுவதில் இழுபறி நிலை காணப்பட்டு வந்தன.

தற்போது மாகாணக் காணி திணைக்களத்தால் துணுக்காய் பிரதேசத்தில் நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன்மூலமாக பல்வேறு காணிப் பிணக்குகள் தீர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-13)



## மாப்பாணர் நினைவாக 92 பனம் விதைகள் நடுகை

யாழ்ப்பாணம், ஒக்.25

**நல்லூர் மாப்பாண முதலியாரின் நினைவாக, 92 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.**

92 ஆவது அகவையில் காலமாகிய நல்லூர் ஆலயத்தின் பத்தாவது நிர்வாகியான ஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நினைவாக, செம்மணி வீதியிலுள்ள நல்லூர் ஆலய வரவேற்பு நுழைவாயிலில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக் கூடத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண பிரதேச செயலர், நல்லூர் பிரதேச செயலர் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர், ஆலய நிர்வாகத்தினர் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-4)

## இடைவிலகல் மாணவர்களுக்கு ஒக்.30 தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஒக்.25

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் இடைவிலகியுள்ள பாடசாலை மாணவர்களுக்கு, எதிர்வரும் 30 ஆம் திகதி கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை பிறந்தவர்கள், பாடசாலை செல்லாதவர்கள் (இடைவிலகியோர்) தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை கோண்டாவிலில் அமைந்துள்ள நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி பெற வருவோர் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரதியுடனும், 18 வயதைப் பூர்த்தி செய்யாதவர்கள் பெற்றோருடன் வருகை தர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)



## நானாட்டான் பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

மன்னார்,ஒக்.25

நானாட்டான் பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டு, பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பிரதேசசபையின் சுதந்திரக்கட்சியின் உறுப்பினருக்கான வெற்றிடத்துக்கே மன்னார் முருங்கன் பகுதியை சேர்ந்த பெனடிற் யாக்கோப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டத்தரணி ம.ரூபன்ராஜ் முன்னிலையில் அவர் நேற்றுமுன்தினம் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (ஐ-56)

## விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, ஒக்.25

தென்மராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகக் காணப்படும் கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலைக்கு (வகை - III) வடக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று முழுமை செய்து வலயக் கல்விப் பணிப்பாளரின் விதப்புரையுடன் எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ச-9)

## தென்மராட்சிக்கு படையெடுக்கும் வடமராட்சியைச் சேர்ந்த மாடுகள்

### விவசாயிகள் விசனம்

சாவகச்சேரி,ஒக்.25

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பட்டிமாடுகள், தென்மராட்சி வடக்கு நோக்கி மேய்ச்சலுக்கு வருகை தருவதால், பயிரழிவு ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சியின் துன்னாலை தொடக்கம் தென்மராட்சியின் சவனால்வெளி, கரப்பான், கப்புதூ, இடைக்குறிச்சி மேற்கு, வரணி, சரசாலை வரையான பகுதிகள் வயல்வெளிகளாகக் காணப்படுவதால், அங்கு நெற்செய்கையாளர்கள் காலபோக நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர். அந்தந்த கமக்கார அமைப்புக்களின் வேண்டுகோளின் பிரகாரம் தென்மராட்சி வடக்குப் பிரதேசத்தில் வளர்க்கப்படும் மாடுகள் கட்டி வளர்க்கப்படுகின்றன.

எனினும் வடமராட்சிப் பகுதியில் பட்டியாக வளர்க்கப்படும் மாடுகள் அவிழ்த்து விடப்பட்டதால், அவை மேய்ச்சலுக்காக தென்மராட்சியை நோக்கிப் படையெடுத்துள்ளன.

இது தொடர்பாக வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் உள்ள விவசாய அமைப்புக்கள், பிரதேச செயலகங்கள், கமநல சேவை நிலையங்கள் உட்பட அனைவருக்கும் அறிவித்துள்ள போதிலும் எந்தவித நடவடிக்கையும் இல்லை என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-4-9)



## கொரோனா விழிப்புணர்வு புதுக்குடியிருப்பில் ஆரம்பம்

முல்லைத்தீவு,ஒக்.25

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில், கொரோனா விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'தாய்த் தமிழ்' பேரவையின் ஏற்பாட்டில், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப நிகழ்வில் நாட்டில் கொரோனாவால் உயிரிழந்த மக்கள் நினைவாக சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உப தவிசாளர், வணிகர் சங்கத் தலைவர், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரதிப் பொறுப்பதிகாரி, மற்றும் தாய்த் தமிழ் பேரவையின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சியாக கிராமங்கள் தோறும் மக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் மற்றும் முகக்கவசம் என்பன வழங்கப்படவுள்ளன. ஒலிபொருக்கிமூலம் விழிப்புணர்வு கருத்தூட்டலும் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-19)

## கள் உற்பத்தி வீழ்ச்சி; விலைகள் அதிகரிப்பு

பனை, தென்னை மரங்களில் கள் உற்பத்தி குறைவடைந்ததன் காரணமாக கடந்த 11ஆம் திகதி முதல் கள்ளின் விலை போத்தலுக்கு 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அறிவித்துள்ளன. அத்துடன் தனிமைப்படுத்தல் ஊடரங்கு அமுலில் இருந்த காலத்தில் கள்ளுத் தவறணைகள் மூடப்பட்டதால் சங்கங்கள் பெரும் நிதிநெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் கள் உற்பத்தி குறைவடைந்து காணப்படுகிறது. இதனால் வழமைபோன்று இந்த வருடமும் கள்ளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் மழையின் பின் உற்பத்தி அதிகரித்ததும் விலைகள் குறைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)


## பகைமைத் தீயில் குளிர் காய்தல்!

மீண்டும் இந்திய – இலங்கைக் கடலெல்லை சூடேறத் தொடங்கியுள்ளது. இந்திய மீனவர்கள் பிரமாண்டமான இழுவைமடிப் படகுகளில் இலங்கையில் வடக்கு கடலோரத்தில் மீன் பிடிப்பதோடு கடல் வளங்களையும் சூறையாடி, மீனவர்களின் வலைகளையும் அறுத்தெறிந்து செல்வது போருக்குப் பின்னர் சாதாரண சம்பவமாக மாறிவிட்டது. அதேபோன்று இலங்கை மீனவர்களும் எல்லை தாண்டிச் சென்று இந்தியக் கடற்பரப்புக்குள் மீன்பிடிப்பதும் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றது. தனியே இருதரப்பு மீனவர்களின் பிரச்சினையாக இருக்கும் வரை ஓரளவு புரிந்துணர்வோடு இந்த விவகாரம் கையாளப்பட்டது. ஆயினும் எப்போது மீனவர்களின் விடயத்தில் அரசியல் கலந்ததோ அப்போதே தீர்க்கப்பட முடியாத – தீர்க்கப்பட விரும்பாத – சிக்கலுக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்தல் என்ற விவகாரம் மாறிவிட்டது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பந்தம் என்பது ஆதியானது. தமிழகத்துக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இடையேதான் இந்த ஆதியான பந்தம் இன்னும் நெருக்கமானது. போர்க்காலத்தில் இலங்கைக் கடற்பரப்பில் ஈழ மீனவர்கள் மீன்பிடிக்க தடைவிதிக்கப்பட்டிருந்தது. கூடவே, பொருளாதாரத் தடையாலும் தமிழர் பகுதி நலிந்தது. இந்த இக்கட்டான சூழலில் தமது உயிரையும் பணயம் வைத்து வடக்கு மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களையும் மருந்துகளையும் ஏனைய தொடர்பாடல்களையும் மேற்கொண்டதில் தமிழக மீனவர்களின் பங்கு மறக்க முடியாதது. அத்தோடு, இலங்கைக் கடலில் ஈழத்தமிழ் மீனவர்கள் இறங்க முடியாது என்பதால் அந்தக் காலகட்டத்தில் தமிழக மீனவர்களின் பிரதான மீன்பிடித் தளங்களாக வடக்குக் கடலோரம் மாறியது. அந்தப் பழக்கமே போருக்குப் பின்னும் தொடர்ந்தது. ஆனால் இப்போது நிலைமைவேறு. கடற்பகுதி முழுவதும் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்காக திறக்கப்பட்டுவிட்டது. ஆகவே, யார் எங்கே மீன்பிடிப்பது என்ற பிரச்சினையும் எழுந்தது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக மீன்பிடித்துப் பழகிய இடத்தை விட்டுவிட தமிழக மீனவர்கள் விரும்பவில்லை. அதேபோன்று தமது பூர்வீகக் கடலில் இன்னொரு தரப்பு மீன்பிடியில் ஆதிக்கம் செலுத்துவதை வடக்கு மீனவர்களும் விரும்பவில்லை. இந்த நிலையில்தான் மாறிமாறி இரு தரப்பும் பரஸ்பரம் ஒருவரையொருவர் எதிரிகளாக நோக்கத் தொடங்கினார்கள். கடந்தகால தொப்புள்கொடி பந்தமென்ற ஐதீகத்தைத் தூக்கியெறிந்துவிட்டு பொருளாதார நோக்கோடு தங்கள் உறவுநிலையை மீளாய்வுசெய்யத் தொடங்கினார்கள். மீனவர்களின் இந்த மனமாற்றத்தை இரு நாட்டு அரசியல்வாதிகளும் மிகச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள பகைமைத் தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அதன் விளைவுகளாகவே அண்மைக்காலமாக கடலில் மீனவர்கள் மோதிக்கொள்வதையும் தரையில் மறுதரப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதையும் காண்கிறோம்.

உண்மையில், இந்தப் பிரச்சினையை மிக இலகுவாக இரு நாட்டு அரசுகளாலும் தீர்த்துக்கொள்ள முடியும். தத்தம் கடலோர எல்லையை தாண்டி தங்கள்நாட்டு மீனவர்களை செல்லவிடாமல் தடுப்பதன் ஊடாக தமிழக மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். விரிந்துகிடக்கும் கடலை எப்படி அங்குலம் அங்குலமாகக் கண்காணிக்க முடியும்? என்று இருநாட்டு அரசுகளும் கேட்கக்கூடும். நாமிருப்பது ஒன்றும் புராதன காலத்தில் அல்ல. இப்போது நவீன ஜி.பி.எஸ் கருவிகள் பாவனைக்கு வந்துவிட்டன. சகல மீனவர்களின் படகுகளிலும் இந்தக் கருவியைப் பொருத்துவதன் ஊடாக அவர்கள் எங்கே நிற்கின்றார்கள் என்பதை ஓர் அறைக்குள் இருந்தே கண்காணிக்க முடியும். எல்லைமீறும் மீனவர்களுக்கு கடலில் இறங்கத் தடை போடுவதன் மூலம் தேவையற்ற அத்துமீறலை மட்டுமல்லாது, இப்போது அதிகரித்திருக்கும் போதைப்பொருள் கடத்தலைக்கூட தடுக்க முடியும். ஆனால், அதையெல்லாம் இந்தியாவோ இலங்கையோ செய்யப்போவதில்லை. அவர்கள் இரு நாட்டு மீனவர்களும் மோதிக்கொள்ளும் பகைமைத் தீயில் குளிர்காய்வதையே அதிகம் விரும்புகின்றனர்.




## பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் கருத்திட்டத்தை ஆரம்பித்தது ஐ.நா.

**கொழும்பு, ஒக். 25**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான 46/1 தீர்மானத்தின் பிரகாரம் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான கருத்திட்டத்தை ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகம் ஆரம்பித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதை வலியுறுத்தும் 46 /1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் ஊடாக பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு, இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய ஆதாரங்களைத் திரட்டி அவற்றைக் களஞ்சியப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உயர்ஸ்தானிகரின் அலுவலகம் ஏற்றுக்கொண்டது. அதன்படி இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுதல், பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறுதல், நீதிமன்றச் செயன்முறைகளுக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்கல் ஆகியவற்றுக்கு ஏற்புடைய வகையில் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தின் இயலுமையை வலுப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அதுமாத்திரமன்றி பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விடயங்கள் உள்ளடங்கலாக இலங்கையின் நிலைவரங்களை தொடர்ச்சியாகக் கண்காணித்து அறிக்கையிடுமாறு உயர்ஸ்தானிகரின் அலுவலகத்திடம் மனித உரிமைகள் பேரவை வேண்டுகோள்விடுத்திருந்தது.

அத்தோடு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடரில் வாய்மூல அறிக்கையையும் 49 ஆவது கூட்டத் தொடரில் எழுத்துமூல அறிக்கையையும் மேலதிக பரிந்துரைகள் அடங்கிய விரிவான அறிக்கையை 51 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்குமாறும் மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகரின் அலுவலகத்துக்கு அறிவுறுத்தியிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே 46/1 தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல் உள்ளிட்ட மேற்கூறப்பட்ட பணிகளை முன்னெடுப்பதற்கான 'இலங்கையின் பொறுப்புக்கூறல் கருத்திட்டம்' ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஜெனிவாவைத் தளமாகக்கொண்டு அந்தக்கருத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## சர்வதேசத்தை சமாளிக்க தெரிவுக்குழு வேண்டும்

### சுதந்திரக்கட்சி கோரிக்கை

கொழும்பு, ஒக். 25

இலங்கைக்கு எதிராக சர்வதேச மட்டத்திலுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் சவால்களை தொடர்பில் ஆராய்ந்து, அவற்றுக்கு தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றக் குழுவொன்றை அமைக்குமாறு அரச பங்காளிக்கட்சியான சுதந்திரக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சு.கவின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது. இலங்கை இராணுவத் தளபதி உட்பட முப்படையிலுள்ள சிலருக்கு அமெரிக்கா செல்வதற்கான பயணத் தடை, சில மேற்குலக நாடுகளில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், சர்வதேச அமைப்புக்களின் அழுத்தங்கள், வலியுறுத்தங்கள் உள்ளிட்ட விடயங்களுக்கே தீர்வு காணப்பட வேண்டும் என சுதந்திரக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. சர்வதேச மட்டத்திலான சவால்களுக்கு தீர்வை காணாவிடின், முன்னோக்கி பயணிக்கும்போது மேலும் பல சிக்கல்கள் உருவாகும் என்பதாலேயே சுதந்திரக்கட்சி தெரிவுக்குழு அமைக்கும் யோசனையை முன்வைத்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. (ம-44)

# சுன்னாகம் தபால் நிலையம்






## அரைகுறை கட்டடத்தினுள்ளே பதுங்கியிருக்கும் ஊழல்

(கடந்த சனிக்கிழமை வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

மிஸ்டர் கழுகு

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஒப்பந்தகாரரை காப்பாற்றுவதற்கே முயற்சித்தது. அதன் காரணமாக அவரிடமிருந்து காலதாமதக் கட்டணம், தண்ட அறவீடு என்பன முதலில் அறவிடப்படவில்லை. கணக்காய்வு நடவடிக்கையின்போது இவற்றுக்கு காரணமாக பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் கூறப்படுகின்றது.

*உண்மையில் இந்த ஒப்பந்தகாரரைப் பயன்படுத்தி ஒதுக்கீடே இல்லாத வேலைகளை மாவட்டச் செயலகம் முன்னெடுத்திருந்தது.*

மாவட்டச் செயலரின் ஓய்வு விடுதி, மேலதிக மாவட்டச் செயலரின் அலுவலக அறை, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரின் அறை என்பன இந்த ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டது. சுன்னாகம் தபால் நிலைய வேலைகளை மேற்கொள்ளவேண்டிய அதேகாலப்பகுதியில், அந்த வேலைகளை மேற்கொள்ளாமல் ஒப்பந்தகாரர் இவற்றை நிறைவு செய்து கொடுத்தார்.

*அந்த நன்றிக் கடனுக்காகவோ என்னவோ ஒப்பந்தகாரரைக் காப்பாற்றி அரசுக்கு நிதி இழப்பை மாவட்டச் செயலர் ஏற்படுத்தியுள்ளார்.*

ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக ஒப்பந்தத்தை நிறைவு செய்யாமையால் 1.68 மில்லியன் ரூபா ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவேண்டும். இந்தத் தொகை ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும்போது அறவிடப்படவில்லை. கணக்காய்வுத் திணைக்களம் இதனைச் சுட்டிக் காட்டியபோது பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் மேற்கொண்டமையால் அதனை அறவிடவில்லை என்று மாவட்டச் செயலர் பதிலளித்திருந்தார்.

ஆனால், திடீரென ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் அந்தப் பணத்தை மாத்திரம் மாவட்டச் செயலர் அறவிட்டுள்ளார். எஞ்சிய தொகையை கணக்காய்வு அறிக்கைக்கு முரணாக ஒப்பந்தகாரருக்கு மாவட்டச் செயலர் வழங்கியுள்ளார்.

*மாவட்டச் செயலர் அந்தப் பணத்தை அறவிட்டமையால், பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் என்று மாவட்டச் செயலர் முன்னர் கூறியமை பொய்யானது அல்லது ஒப்பந்தகாரரை காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அவரது இப்போதைய நடவடிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.*

ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலை நிறைவு செய்யப்படாமைக்கான தண்ட அறவீடு 1.16 மில்லியன் ரூபா ஒப்பந்தகாரரிடமிருந்து இன்று வரை அறவிடப்படவில்லை. அரசுக்கு மாவட்டச் செயலரால் ஏற்படுத்தப்பட்டுள்ள இழப்பாகும்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலை நிறைவு செய்யப்படாமையால், செயற்பாட்டு பிணைமுறியை மாவட்டச் செயலகம் வருமானமாக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு மாவட்டச் செயலகம் செயற்புடாமல் 0.84 மில்லியன் ரூபாவை அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளது.

அதனைவிட செயற்பாட்டு பிணை முறி ஒப்பந்த முடிவுத்திகதியிலிருந்து 28 நாள்களுக்கு வலுவாக இருக்கவேண்டும் என்று ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. 30.07.2020 அன்று செயற்பாட்டு பிணை முறி காலாவதியாகியிருந்தது. இதன் அடிப்படையிலேயே மாவட்டச் செயலகம் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியிருக்க முடியும். அதற்கான முழுமையான அதிகாரம் ஒப்பந்த வழங்குநரான மாவட்டச் செயலரிடமிருந்தும் அவர் அதனைச் செய்யவில்லை.

செயற்பாட்டு பிணைமுறி காலாவதியானதன் அடிப்படையில் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியிருந்தால், பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தலுக்குச் சென்றிருக்க வேண்டியதில்லை என்பதுடன் ஆரம்பத்திலேயே காலதாமாகக் கட்டணம், வேலை நிறைவு செய்யாமைக்கான தண்ட அறவீடு என்பவற்றைப் பெற்று, தபால் நிலையக் கட்டடத்தின் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்திருக்க முடியும்.

30.07.2020 அன்று செயற்பாட்டு பிணை முறி காலாவதியாகியிருந்தது தெரிந்தும், 31.08.2020 அன்று ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும்போது ஒப்பந்தகாரருக்கான கொடுப்பனவு சிபார்சு செய்யப்பட்டு மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இது அரசுக்கு திட்டமிட்ட ரீதியில் நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கின்றது.

ஒப்பந்தகாரர் மேற்கொண்ட வேலைகளுக்காக 12.21 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரிடமிருந்து அறவிடவேண்டிய எஞ்சிய நிதிகளையும் சேர்த்தால் 16.8 மில்லியன் ரூபா வரையில் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிதி இழப்பு மாத்திரம் இல்லாமல், அந்தக் கட்டடம் முழுமைப்படுத்தி மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாததன் ஊடாக சேவையிழப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

*இந்த இழப்புக்களுக்கு பொறுப்புக்கூற வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?*

இதேவேளை சுன்னாகத்தில் அமைக்கப்பட்டு அரைகுறையிலுள்ள மேற்படி கட்டடத்தை மீண்டும் ஓர் ஒப்பந்தகாரரிடம் வழங்கி மீள அமைப்பதற்கு அரசுக்கு இதனை விட அதிகளவு பணம் தேவை. இதனால் மீண்டும் ஓர் இழப்பு அரசுக்கு ஏற்படப்போகின்றது. நாட்டின் தற்போதைய நிதி நிலைமையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டமையால், கட்டடம் இதே அரைகுறை நிலைமையில் பாவனையற்று நீண்ட காலத்துக்கு இருக்கப்போகின்றது. இதனால் ஏற்படும் சேதங்களையும் சேர்த்தே இழப்பாக மதிப்பிடவேண்டும்.

மாவட்டச் செயலரால், 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தால் மேற்படி திட்டத்துக்குரிய கட்டுநிதி விடுவிக்கப்படாமல் போகலாம் என்ற தவறான முன்கற்பிதம் காரணமாகவே ஒப்பந்தத்தை முடிவுறுத்தப்பட்டுள்ளது.


இதன் ஊடாக ஆட்சியாளர்களுக்கு களங்கத்தை ஏற்படும் சிந்தனையுடன் மாவட்டச் செயலர் செயற்பட்டுள்ளார் என்பதும் புலனாகின்றது.

தேசிய கணக்காய்வுத் திணைக்களத்துக்கான மாவட்டச் செயலரின் பதிலில், ஒப்பந்தகாரரால் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக்கு அதிகமான வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தபோதும், குறைவான பணமே வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு ஒப்பந்தகாரரும் முடிவுறுத்தப்பட்ட வேலையை விட அதிகளவு தொகையைக் குறிப்பிட்டே பணத்தை பெற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள் என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த ஒன்று. அதனை விட அவ்வாறு பெருமனது படைத்த ஒப்பந்தகாரராக இருந்தால், அடுத்த ஆண்டு எஞ்சிய நிதி வரும் என்ற நம்பிக்கையில் மிகுதி வேலைகளையும் முடித்திருக்கலாமே?

### கொடுப்பனவு

ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கேட்டபோது முற்பணம் மற்றும் 3 கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாக பதிலளிக்கப்பட்டது. ஆனால் தேசிய கணக்காய்வுத் திணைக்களம் 4 கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகக் கூறியுள்ளது. அப்படியாயின் எது உண்மை?

### குறிப்புத் தாள் முறைகேடு



தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட பதிலில் மேற்படி விடயங்களுக்காக இரண்டு கோவைகள் பேணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கோவைகளின் குறிப்புத்தாள் கோரப்பட்டதற்கு அதுவும் வழங்கப்பட்டது. அது எந்தெந்த கோவைக்குரியது என்று தனித்து அடையாளப்படுத்தப்படவில்லை. இந்த விடயதானத்தை உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.கிருஷ்ணராசன், அபிவிருத்தி

(மறுபக்கம் பார்க்க)

## இன்றைய நாள்

**மேடம்:** தாய் வழி உறவினர்களுடன் சந்தோஷமாக பொழுது போகும். நண்பர்களிடம் விட்டுக்கொடுத்துச் சென்று நட்பை தக்கவைப்பீர்கள். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

**இடபம்:** மகிழ்ச்சி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். முதலீடுகளை ஆராய்ந்து செய்யவும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வெளிநாடு செல்லும் வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கக்கூடும்.

**மிதுனம்:** குழந்தைகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பொறுப்புகள் கூடும். நீண்ட நாளாக விரும்பிய ஆடம்பரப் பொருளின் சேர்க்கை உண்டு. வசீகரத் தன்மை அதிகரிக்கும்.

**கடகம்:** கடந்த நாட்களில் இருந்த சலிப்பு நீங்கும். உற்சாகம் கூடும். வியாபாரிகளுக்கு புதிய நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தரும். பணியாளர்களுக்கு ஆதாயம் உண்டு.

**சிம்மம்:** கலைத்துறையை சேர்ந்தவர்களின் முயற்சி ஆதாயம் தரும். வாழ்க்கைத்துணைக்கு பணி பற்றிய நல்ல செய்தி இன்று வரும். காலதாமதமாக வாய்ப்பு உண்டு.

**கன்னி:** முயற்சி செய்த விஷயங்களில் ஓரளவு வெற்றி கிடைக்கும். பணியாளர்கள், மாணவர்களின் திறமை இன்று வெளிப்படும். திடீர் நன்மை உண்டு. சொத்து விடயத்தில் கவனம் தேவை.

**துலாம்:** பணியாளர்களுக்கு பாராட்டு கிடைக்கும். குழந்தைகளால் பெருமிதம் வரும். புதிய மனிதர்களிடம் அதிக நெருக்கம் காட்ட வேண்டாம். ரகசியங்களை பகிர்வதால் தொல்லை ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** ஆபத்தான விஷயங்களில் தேவையில்லாமல் இறங்காதீர்கள். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் விடயம் ஒன்று நடைபெறும்.

**தனுசு:** மாணவர்கள் சிறப்பாக பாராட்டு பெறுவீர்கள். மகிழ்ச்சி கூடும். வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான நல்ல செய்திகள் வந்து சேரும். மனதில் தேவையற்ற கவலைகள் நெருங்க அனுமதிக்காதீர்கள்.


**மகரம்:** வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். நிரந்தர முதலீடுகள் செய்வது பற்றிய வெற்றி கிடைக்கும். சொத்துக்கள் வாங்குவது, விற்பதில் அவசரம் காட்ட வேண்டாம்.

**கும்பம்:** உழைப்பின் அளவுக்கு ஏற்ப நல்ல பலன் பெறுவீர்கள். முயற்சிகளில் சற்றுத் தாமதமாகவே வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் கடந்த சில நாட்களாக இருந்த வருத்தம் தீரும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். பிரிந்து சென்ற நண்பருடன் நெருக்கம் உண்டாகும். பிறருக்கு உதவி செய்வீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வீர்கள்.

# கொரோனாவால் குறைந்தது இந்தியர்கள் ஆயுட்காலம்!

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



**புதுடில்லி, ஒக்.25**


**கொரோனாவால் இந்தியர்களின் ஆயுட்காலம் குறைந்து இருக்கிறது என ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொரோனாவுக்கு பின் இந்தியர்களின் சராசரி ஆயுட்காலம் குறைந்திருக்கிறதா என்பதை கண்டறிவதற்கானஒருஆய்வை, மும்பையில் உள்ள மக்கள் தொகை ஆய்வுக்கான சர்வ தேச நிறுவனம் (ஐ.ஐ.பி.எஸ்.) முன்னெடுத்தது.

கொரோனா வைரஸ் பெருந் தொற்றின் அலைகளால் லட்சக்கணக்கான உயிர்கள் பலியானதால், நாடு முழுவதும் உள்ள இறப்புமுறைகளில் கொரோனா பெருந்தொற்றின் தாக்கத்தை ஆய்வு செய்வதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவில் இந்தியாவில் 2020ஆம் ஆண்டு நிலைவரப்படி ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 69.5 வயதில் இருந்து 67.5 வயதாகவும், பெண்களின் ஆயுள்காலம் 72 வயதில் இருந்து 69.8 வயதாகவும் குறைந்து இருக்கிறது என அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

# கடவுள் சிலையை அவமதித்த இளைஞர் கைது




அசாம், ஒக்.25

இந்து மதக்கடவுள் விநாயகர் சிலையை காலால் மிதிப்பது போன்று புகைப்படம் ஒன்றை எடுத்து அதை சமூகவலைத் தளத்தில் பதிவிட்டவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அசாம் மாநிலம் கிழக்கு கர்பி அங்லாங் மாவட்டத்தில் உள்ள டென்கலங்சோ கிராமத்தில் உள்ள மலைப்பகுதியில் புராதானமான இந்த விநாயகர் சிலையை சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள மக்கள் வழிபாடு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த சிலையை அவமதிக்கும் விதமாக இளைஞர் ஒருவர் காலணி அணிந்தவாறு காலால் விநாயகர் சிலையை மிதிப்பது போன்று புகைப்படம் எடுத்துள்ளார். அந்தப் புகைப்படத்தை சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கிறது. (ச)




உத்தியோகத்தர்களான கு.குகேந்திரன், வை.விஜித் ஆகியோர் கையாண்டதாக மாவட்டச் செயலகத்தால் தகவல் வழங்கப்பட்டது.

**ஆனால் குறிப்புத்தாளில் 6 வித்தியாசமான கையெழுத்துக்கள் காணப்படுகின்றன.**

***அப்படியாயின் தகவல் உரிமைச் சட்டத்தின் ஊடாக, கோவையைக் கையாண்ட உத்தியோகத்தர்களின் விவரங்கள் வழங்கப்படும் போது மறைக்கப்பட்டனவா? அல்லது குறிப்புத் தாளில் உள்ள கையெழுத்துக்கள் போலியானவையா? இதில் எது உண்மை?***

**இதனைவிட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கேட்கப்பட்டபோது வழங்கப்பட்ட**

***குறிப்புத்தாளில் ஓர் விடயம் நீக்கப்பட்டே வழங்கப்பட்டது என்பதை 'உதயன் புலனாய்வுக்குழு' கண்டறிந்தது.***




*தகவலறியும் உரிமைச் சட்டத்தில் வழங்கப்படாது மறைக்கப்பட்ட குறிப்புத்தாளின் ஒரு பகுதி.*

மேற்படி குறிப்புத்தாளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்ற குறிப்பு 30.12.2020 அன்று புதிய குறிப்புத்தாளில் எழுதப்பட்டிருந்தபோதும் அந்த விடயம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கப்படவில்லை.

### முறைமை தவறு

தேசிய கணக்காய்வு அலுவலகம், உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறைமையிலும் தவறு இருக்கின்றது என்று சுட்டிக்காட்டிய பின்னரும் இதுவரை அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.




ஒப்பந்தகாரரிடமிருந்து பிரதியுபகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசுக்கு திட்டமிட்டு இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளமை புலனாகின்றது. அதனைவிட சுன்னாகம் பகுதி மக்களுக்கு சேவை பெறுவதற்கான இழப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு மோசடியை மேற்கொண்டமைக்காக இதுவரை எவரும் தண்டிக்கப்படவில்லை. இந்த நிலையில் இது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

அரச ஊழியர் ஒருவர், கோவை ஒன்றை சேதப்படுத்துதல் அல்லது மாற்றுதல் என்பன மிகப் பாரதூரமான குற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு அவை இரண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை ஆதாரபூர்வமாக நிரூபணமாகியுள்ளது. இனியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

அதேவேளை மாவட்டச் செயலக அலுவலர் ஒருவரால் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்து அது தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு பாக்கியலிங்கம்

யாழ். சாவகச்சேரி நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும், கொழும்பு, மட்டுவில் தெற்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பாக்கியலிங்கம் (சட்டத்தரணி) அவர்கள் கடந்த (22-10-2021) வெள்ளிக்கிழமை அன்று மட்டுவில் இல்லத்தில் காலமானார்.


அன்னார், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கார்த்திகேசு சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,சர்வேஸ்வரி (ராசாத்தி) அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கராஜா, சந்திரலிங்கராஜா, பஞ்சலிங்கம், மற்றும் ராஜா (கொழும்பு) தர்மா (அவுஸ்திரேலியா) செல்வரதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உமா (அவுஸ்திரேலியா) ரஜீவ்(லண்டன்) சுஜீவ் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமேஸ் (அவுஸ்திரேலியா), சுமதி (லண்டன்), மஞ்சரி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும், சதித்தியா, யாதவ், சிவானி, வாரகி, திமோதி, நிலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்களுக்கு :
மனைவி - 077 795 8272

தகவல்:
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 28.10.1975

மறைவு 25.09.2021

## அமரர் வினாசி பாலமோகன்

நாட்கள் முப்பத்தொன்று கழிந்ததோ
அன்பான நல்வாழ்க்கை அமைத்துக் கொண்டாய்
ஆண்டவன் உன் வாழ்க்கையில் - நீண்ட
ஆயுள் தராது பறித்துக் கொண்டான்

எளிமையான உருவம் கொண்டு
எட்டாத சிகரம் தொட்டாய்
யார் கண்பட்டதோ தெரியவில்லை
இடையிலேயே எம்மை விட்டு பிரிந்தாய்

உன் பிரிவு கண்டு நாம்
ஆறாத துயரில் தவிக்கின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று முன்தினம் (23.10.2021) சனிக்கிழமை கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.10.2021) திங்கட்கிழமை அச்சுவேலியில் அமைந்துள்ள அன்னாரின் வீட்டில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்தி பிரார்த்தினையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

சகோதரர்

# கண்ணீர் அஞ்சலி



எமது பாலர் பகல் விடுதியும்
முன்பள்ளியினதும் நிர்வாக சபை
உறுப்பினர் **திரு.இ.நிதீபன்**
அவர்களின் அன்புத் தந்தை

## வேலுப்பிள்ளை இராசதுரை

அவர்கள் 23.10.2021 அன்று இறைபதம் அடைந்துவிட்டார் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்
நீர்வேலி.**

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 • 09 • 1939



இறப்பு 31 • 10 • 2015

## அமரர் செல்வநாயகம் சிவஞானசுந்தரம்


அப்பா நீங்கள் இறைவன் பாதத்தில் சேர்ந்து
ஆறாண்டு காலமாகி விட்டதப்பா
உங்களை பிரிந்து வாடுகின்றோம் நாம் மீண்டும்
வருவாரோ இப் பூவுலகில் எம் குடும்ப விளக்காக
ஆண்டு ஆறு சென்றாலும் நீங்காது
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சம் வரை

உண்டுவத்தை,
அல்வாய் தெற்கு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர் மகன்

# மரண அறிவித்தல்

மலர்வு 23 • 01 • 1965



உதிர்வு 21 • 10 • 2021

## செல்வரெத்தினம் செல்வகுமார்

யாழ். புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்கள் கடந்த (21.10.2021) வியாழக்கிழமை இலங்கையில் காலமானார்.

அன்னார் செல்வரெத்தினம் காலஞ்சென்ற தவமணி தம்பதிகளின் ஏக புத்திரரும் புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி, சாரதாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், திலகராணி அவர்களின் அன்புக் கணவரும், சபரி கிரிஷன், சதுசியா, தசானா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், செல்வவதி, செல்வநீலா, செல்வசோதி, செல்வவிஜி, செல்வமீனா, செல்வரஜனி, ஆகியோரின், அன்புச் சகோதரரும், புண்ணியமூர்த்தி, காலஞ்சென்ற காஞ்சனாதேவி மற்றும், கருணைநாதன், மகேந்திரன், பிரபாகரன், அசோக்குமார், சத்தியநாராயணன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமுதினி அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2021) திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் 70/3 திருவையாறு எனும் முகவரியில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் 11.00 மணியளவில் புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் வீராமலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 844 4877,
076 284 6002

தகவல்:
குடும்பத்தினர்

# ஆயுதம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.25

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் நேற்று சக்தி வாய்ந்த வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. தனியார் காணியின் உரிமையாளர் துப்புரவு செய்யும்போது வெடிபொருள்கள் இனங்காணப்பட்டுள்ளன. இது தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, விசேட அதிரடிப் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்று வெடிபொருள்களை மீட்டுள்ளனர்.

(ஏ-27)

# அறிவிப்பு ஏதுமின்றி சத்துணவு நிறுத்தம்

## கர்ப்பிணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக். 25

**மகளிர் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சால், கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்ட ஊட்டச்சத்து உதவித்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் கிராமப்புற கர்ப்பிணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொதி என்ற அடிப்படையில், 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய பற்றுச்சிட்டை கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான பொதி வழங்கும் பற்றுச்சிட்டையில் காலவரையறை குறிக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தற்போதைய விலைவாசியில் கடலை வகைகள் மற்றும் ஊட்டச்சத்து உணவுப் பொருள்கள் அதிக விலைக்குக் கொள்வனவு செய்ய முடியாத நிலைமைக்கு கிராமப்புறப் பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அரசால் உத்தியோகபூர்வமாக எந்தவித அறிவித்தலும் விடுக்கப்படவில்லை. எனினும் உணவுப் பொதிகளை விநியோகிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விற்பனை நிலையங்களில், திட்டம் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று பதில் கூறப்படுகின்றது.

எனவே கிராமப்புறக் கர்ப்பிணிகளின் ஆரோக்கியம் கருதி வழங்கப்பட்ட உணவுப் பொதியை சீரான முறையில் விநியோகிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கர்ப்பிணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4)

# போலி முகவர்களிடம் ஏமாற வேண்டாம்

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 25

தொழில் வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் இடைத் தரகர்களிடம் சிக்காமல், உரிய முகவர்களை நாட வேண்டும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான நேரடி அணுகல்களை அதன் கட்டுப்பாட்டின்கீழ் உரிமம் பெற்ற தரப்பினரிடமிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பணியகம் எச்சரித்துள்ளது.

உரிமம்பெற்ற 800 முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் நாட்டில் உள்ளன. தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்வதில் ஏதேனும் சிக்கல் நிலை காணப்படுமாயின், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 1989 என்ற இலக்கத்துக்கு அழைப்பைமேற்கொள்ள முடியும் என்றும் பணியகம் தெரிவித்துள்ளது. (ம-4)



# மட்டுவில் வடக்கு வீதிக்கு பெயர் சூட்டும் நிகழ்வு

மட்டுவில்,ஒக்.25

மட்டுவில் வடக்கில் உள்ள வீதியொன்றுக்கு பெயர் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நா.நல்லதம்பி ஆசிரியரின் நினைவாக மட்டுவில் வடக்கில் உள்ள பொது வீதியொன்றுக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பொதுமக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் கலந்து கொண்டு பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்தார்.

மேலும் நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-159)



# உதவிப் பொருள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.25

சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் ஏற்பாட்டில், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை பொறுப்பு மருத்துவர் யோ.யதுநந்தனின் வேண்டுகோளுக்கு இணங்க 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்கள், சுகாதாரப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு, மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த து.சிவராஜாவின் 61ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட நிதியுதவியில் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் போஷகர் ஈஸ்வரபாதம் சரவணபவன், நிர்வாகக் குழு உறுப்பினர்களான நவரத்தினம் சிவானந்தன் , கருணாகரன் குணாளன், சபா பரமேஸ், ராகுலன், ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-இ)

# 19 குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி

கிளிநொச்சி,ஒக்.25

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வண்ணாங்கேணி மற்றும் கிளாலி பகுதியைச் சேர்ந்த சுயதொழில் மேற்கொள்ளும் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

சுயதொழில் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லும் நோக்கில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையால் 19 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பிரதேச சபையில் வைத்து தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனால் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-13)



# விவாகரத்து பெற்றவர்கள் சடலங்களாக மீட்பு

கொழும்பு,ஒக்.25

விவாகரத்துப்பெற்று, கடந்த 5 வருடங்களாகப் பிரிந்து வாழ்ந்த இருவர், ஒரே அறையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி ஊரகஸ்மங்ஹந்திய, கொரகீனப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. கொரகீனப் பகுதியில் வசித்து வந்த 39 வயதுடைய ஆணொருவரும், 38 வயதுடைய பெண்ணொருவருமே வீடொன்றிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். வீட்டின் அறையொன்றின் கட்டிலில் கையில் பூச்செண்டுடன் பெண்ணின் சடலமும், தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் விவாகரத்துப் பெற்றவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-4)



# நடமாடும் மருத்துவ முகாம்!

முள்ளியவளை பிரதேசத்தில் நடமாடும் ஆயுள்வேத மருத்துவ முகாம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் மருத்துவ முகாம் முன்னெடுக்கப்பட்டது.

கிச்சிராபுரம் வட்டாரத்தில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன், பிரதேசசபைச் செயலர், ஆயுள்வேத மருத்துவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மருத்துவ முகாமில் 200க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளதுடன், இனிவரும் காலங்களில் வட்டாரங்கள் தோறும் மருத்துவ முகாம் மேற்கொள்ளப்படும் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (ஐ-19)

# நூல் வெளியீடு

கிளிநொச்சி,ஒக்.25

ஆசிரியர் ப.சசிதரனின் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான "நுண்ணறிவு வழிகாட்டி" என்ற நூல் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் நூலை வெளியிட்டு வைக்க ஆசிரியர் ஆலோசகர் க.யுவராசா பெற்றுக் கொண்டார். (ஐ-13)



## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 05 . 1981



மறைவு 24 . 10 . 2021

### அன்றூ-அஜித் சஞ்ஜீவ்

**(அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், சாவகச்சேரி)**

அரியாலையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அன்றூ அஜித் சஞ்ஜீவ் நேற்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்றூ மற்றும் இந்திராணி தம்பதியரின் அன்பு மகனும், யோசேப் அமிர்தம், சகாய தவராணி தம்பதியரின் அன்பு மருமகனும், யூட்ஜின் ஜெனிற்றாவின் (நெடுந்தீவு) அன்புக் கணவரும், அக்ஷயாவின் பாசமிகு தந்தையும், டிலாணி (நெதர் லாந்து), அனுஷியா (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோ ரின் பாசமிகு சகோதரனும், சுரேஷ் (நெதர்லாந்து), அன்பு மைத்துன ரும், ஜஸ்ணவியின் (நெதர்லாந்து) பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.10.2021) திங்கட் கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல.104, புங்கன்குளம் வீதி, அரியாலையில் உள்ள அன்னாரின் தாயாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின் றோம்.

**104, புங்கன்குளம் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**செல்வி.அ.அனுஷியா (சகோதரி)**
**திருமதி அ. இந்திராணி (தாய்)**

# வெளியே விமர்சிக்காதீர்கள் உள்ளே பேசித் தீர்ப்போம்

## ஆளுங்கட்சியினரிடம் கோத்தாபய வேண்டுகோள்



கொழும்பு, ஒக்.25

அரசுக்குள் பிரச்சினைகள் இருந்தால் அது தொடர்பில் வெளியில் விமர்சனங்களை முன் வைப்பதை விடவும், உள்ளேயே பேசித் தீர்த்துக் கொண்டு முன்னோக்கி பயணிப்போம்

இவ்வாறு பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக் கும், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கும் அறைகூவல் விடுத்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான 'மொட்டு' அரசின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்றிரவு கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை யில் நடைபெற்றது. பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் பங்கா ளிக்கட்சி தலைவர்கள் உட்பட ஆளுங்கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

இதன்போது உரப்பிரச்சினை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், சமகால அரசி யல் நிலைவரங்கள் தொடர்பிலும் கலந்துரையா டப்பட்டுள்ளன.

சந்திப்பு முடிவடைந்த பின்னர் அது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் எஸ். எம். சந்திரசேன,

உரப் பிரச்சினை, விவசாயி களின் பிரச்சினை, நாட்டின் பாதுகாப்பு உட்பட அனைத்து துறைகள் தொடர்பி லும் கலந்துரையாடப்பட்டன. அதேபோல வெளி யில்சென்று விமர்சனங்களை முன்வைக்காது, அவை தொடர்பில் அரசுக்குள்ளேயே பேசித் தீர்த்துக்கொள்ளுமாறும், ஒன்றாக பயணிப்போம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார் - என்றார்.

அதேவேளை, சந்திப்பு தொடர்பில் கருத்து வெளி யிட்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார,

பெருந்தோட்டத்துறைக்கு இரசாயன உரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது விடயத்தில் நாம் ஒரு அடி பின்வாங்குகின்றோம். வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின் னர் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணப் பொதியொன்று வழங்கப்படும் - என் றார்.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலைய விவகா ரம் பற்றி பேசப் படவில்லை. கட் சித் தலைவர்கள் கூட்டத்திலேயே அது பற்றிக் கலந் துரையாடுவோம் என்று அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

(எ-44)

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 10 . 1967



மறைவு 18 . 10 . 2021

### திருமதி சிறிகாந்திமதி கணேசமூர்த்தி (ராசாத்தி)

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சன்சைன் மெல் பேர்ன் அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறிகாந்திமதி கணே சமூர்த்தி (ராசாத்தி) கடந்த (18.10.2021) திங்கட்கிழமை மெல்பேர்னிலுள்ள அவரது இல்லத்தில் இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற சிறினிவாசகம் பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு மகளும் செல்லத்துரை கதிர்காமதேவி ஆகியோரின் அன்பு மருமகளும், செல்லத்துரை கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும், சஜீவன், காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறிகாந்தராசா (சிறி - பிரான்ஸ்), சிறிவிக்கினேஸ்வரராசா (செல்வன் - சுழி புரம்), சிறி லட்சுமிகாந்தன் (கண்ணுத்துரை - சுழிபுரம்), சூரியகாந்தன் (சூரி - பிரான்ஸ்), சிறிஅச்சுதானந்தன் (அருமைத்துரை - அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு அக்காவும், சிவமலர், செல்வமலர், விமர்ஜினி, கிருபாமூர்த்தி, சுந்தரமூர்த்தி, சிவலோநாயகி, சத்தியமூரத்தி, காலஞ்சென்ற லோகநாயகி, முருகமூர்த்தி, விஜயராணி, மதிவதனி, சுமித்திரா, சுசிலாதேவி, தவராசா, யுகபாலன் ஆகியோரின் அன்பு மைத்து னியும், யாழினி, டிலோயன், சிறிசங்கர், பிரதீபா, சிறிகிருஷ்ணா, சிறிபிரகாஷ், சிறி சுபாஷ், சிறிரதன், சிறிப்பிரியா, பாக்கியகௌரி, சிறிவிமர்ராஜ், சிறிவாசன், சிறிமதீசன், சித்திரகலா, விஜோஜினி, பிரகாஜினி, கோகுலன், திவாகரன், ஜெனிதா, சிவாநந்தன், டிலோஜினி, செல்வசுந்தரம், பிரகாசினி, திருக்குமரன், கௌதமன் ஆகியோரின் அன்பு மாமியும், திலோஜன், சுதர்சன், சபேசன், பிருந்தா, விஜிதா, சண்முகப்பிரியன், கஜந்தா, அனோஜன், லிசித்தா, டினேஸ் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு 7.Tudor Road, Sunshine, North VIC 3020 Australia என்னும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற Altona Memorial Park, 2 - 14 Dohertys Road, Altona North VIC 3025 என்னும் இடத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : சகோதரர் (கண்ணுத்துரை)**
**கணேசமூர்த்தி - கணவர் அவுஸ்ரேலியா (+ 470 415 944)**
**சிறிஅச்சுதானந்தன் - சகோதரர் அவுஸ்ரேலியா (+614 70420 401)**
**சிறிலட்சுமிகாந்தன் - சகோதரர் இலங்கை (+ 94 777 664 645)**

## துயர் பகிர்கின்றோம்



குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் நீண்ட நாள் அபிமானியும் எமது கலை, இலக்கிய, சைவசமய முன்னேற்ற செயற்பாடுகளுக்கு என்றும் துணை நின்ற

**அமரர் கலாபூஷணம் சைவப்புலவர்**
**சு.செல்லத்துரை**

அவர்களின் மறைவையொட்டி அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

**குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர்**

## மரண அறிவித்தல்

### சிவானந்தராசா யோகாம்பிகை (குட்டி ரீச்சர்)

**(ஓய்வுநிலை அதிபர்)**



யாழ் அனலைதீவை பிறப்பிடமாகவும் கிளி நொச்சி ஸ்கந்தபுரம் இல.188ஜ நிரந்தர வசிப்பிட மாகவும் மண்டைதீவு 7ம் வட்டாரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவானந்த ராசா யோகாம்பிகை (குட்டி ரீச்சர்) ஓய்வுநிலை அதிபர் அவர்கள் நேற்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சோதிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற ரகுநாதன் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவானந்த ராசா (அதிபர்) அவர்களின் பாசமிகு துணைவி யும், அமரர்களான துரைராசா, அமிர்தாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, சிவஞானசுந்தரம்பிள்ளை நாகேஸ்வரி, தணிகாசலம் மற்றும் சிவபாதசேகரம் (மணியான் மாஸ்ரர்- நயினாதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவயோகராஜ் (மண்டைதீவு), சிவாஜினி (இந்தியா), யோகானந்தராஜ் (உதயநகர், கிளிநொச்சி), அமிர்தானந்தராஜ் (ஸ்கந்தபுரம்), காலஞ்சென்ற நவந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீகாந்ததேவி (மண்டைதீவு), சுரேஸ்குமார் (இந்தியா), வினோஜா (உதயநகர், கிளிநொச்சி), சோபா (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுரேன், அஜித், பவதாரன், கஜோஜினா (மண்டைதீவு), வினோதனன், சாதுரியா (இந்தியா), காவியன், வேணுஜா (கிளிநொச்சி), அசோதிஜா, கோபிகா, கோபிஷாந் (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடமான மண்டைதீவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஸ்கந்தபுரம் இந்து பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1982 ரேவதி நட்சத்திரம் அரச தொழில் புரியும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

**077 545 2892**

## மோட்டார் சைக்கிள் தேவை

TVS Scooty Pep / Pep Plus
மோட்டார் சைக்கிள்கள் விலைக்கு வாங்கப்படும்.

**075 090 6486**

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல. - J/1594 பதிவு திகதி – 11.03.1972

### சாரதி (அமையம்) விண்ணப்பம் கோரல்

01. வயதெல்லை - 18 - 45 வரை
02. பால் - ஆண்

**தகைமை:-**

அ. 08ம் வகுப்புச் சித்தி பெற்றிருத்தல்.

ஆ. உழவியந்திரம் மற்றும் மூன்று சக்கர வாகனம் செலுத்துவதில் 03 வருடங்களிற்கு குறையாத அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

01. உழவியந்திரம் மற்றும் மூன்று சக்கர வாகனத்தினைச் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
02. சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
03. பதவிக்காலம் 06 மாதங்கள்
04. கடமையாற்றும் நாளொன்றுக்கு வேதனமாக ரூ.1000.00 வழங்கப்படும் (ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதி பங்களிப்பு செலுத்தப்படும்)
05. தங்கள் சுயவிபரத்தினை தயாரித்து 15.11.2021ம் திகதிக்கு முன்னர் தலைவர் ப.தெ.வ.அபி.கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 15.11.2021**

**25.10.2021**

**தலைவர்**
**திரு.வ.தெய்வேந்திரம்**

# சிறுமி துஷ்பிரயோகம் 18 வயது இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஒக்.25

சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் 18 வயது இளைஞர் ஒருவர் மல்லாவி பிரதேசத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 15 வயதுச் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டிலேயே இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-19)

# மனைவியை குத்திவிட்டு கணவன் தலைமறைவு!

யாழ்ப்பாணம், ஒக்.25

மனைவியைக் கத்தியால் குத்திக் காயப்படுத்திய கணவன் தலைமறைவாகியுள்ளார். இந்தச் சம்பவம் இன்று தையிட்டியில் நடந்துள்ளது.

குடும்பத் தகராறு முற்றி கத்திக் குத்து நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. 22 வயதுடைய பெண் ஒருவரே காயமடைந்துள்ளார்.

காயங்களுக்குள்ளான மனைவி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கணவரை பொலிஸார் தேடி வருகின்றனர். (எ-27)

## ஆளுநரைச் சந்தித்த ரிஷாத்



வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஜீவன் தியாகராஜாவை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)


# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

# தீபாவளி விசேட தள்ளுபடி



அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும்
சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாகவும்
இந்தியன் செலக்ஷனின் தீபாவளி மலிவுவிற்பனை
நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு
வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்து கொள்கின்றோம்.

பட்டுச்சாறிகள் கொட்டன் சாறிகள், சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள் சிறுவர்,
சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள் மற்றும்
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள்

இம்முறை தீபாவளியை இந்தியன் செலக்ஷனுடன்
கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.




**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 22.10.2021 - 07.11.2021 வரை**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

# இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## "சுத்தமான நீர், சுகமான வாழ்வு"





மாபெரும் விலைக் கழிவு

**Rs.29,000/=**

~~Rs 35,000/=~~

TDS <2000PPM

* இலவச நீர் பரிசோதனையுடனும்,
* மிகக் குறைந்த விலையிலும்,
* அதிகபட்ச உத்தரவாதத்துடனும்,
* எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
* வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்
* 24 மணித்தியாலத்தினுள் முறைப்பாட்டு திருத்திக்கொடுத்தல்



**YARL SMART** *Water solution (Pvt) Ltd.*

341, KKS Road, Jaffna / Karadippoku Junchtion, Jaffna Road, Kilinochchi.

**021 430 0044, 076 666 5267**

yarlsmartwater@gmail.com / www.yarlsmartwater.com

## நாகவிகாரையை...

யாழ்ப்பாணம் மாநகர சபையால், ஆரிய குளத்தின் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் இந்தக் குளம் சீரமைப்புச் செய்யப்படும் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்திருந்தார்.

அதன்பின்னர், அந்தக் குளத்தின் நடுவே தியான மண்டபம் அமைக்க வேண்டும் என்று ஸ்ரீ நாகவிகாரை விகாராதிபதி கடிதம் மூலம் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரிடம் கோரியிருந்தார் என்று தகவல் வெளியாகி சர்ச்சையாகியிருந்தது.

அது தொடர்பாக விளக்கமளித்த யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், விகாராதிபதி கடிதம் அனுப்பிருந்தார் என்றும், ஆனால் யாழ்ப்பாணம் மாநகர சபை அது தொடர்பாக எந்த உறுதி மொழியையும் வழங்கவில்லை என்றும் கூறியிருந்தார்.

இந்தநிலையிலேயே, மீண்டும் விகாராதிபதியால் கடும் தொனியில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்று அறிய முடிந்தது. யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் பௌத்த ஆலயத்தை இல்லாதொழிக்க முயற்சிக்கிறார் என்று விகாராதிபதி அந்தக் கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார் என்றும் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர மேயர் சுற்றுலாப் பயணிகள் அமர்ந்து மது அருந்துவதற்கும், கஞ்சா புகைப்பதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறார் என்று கூறியுள்ள விகாராதிபதி, பௌத்த கோயிலின் புனிதத் தன்மையைப் பாதிக்கும் என்றும் கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்றும் அறிய முடிந்தது.

விகாரையில் திருவிழாக் காலங்களுக்கு வரும் பக்தர்கள், தமது வாகனங்களை ஆரியகுளத்தின் அருகேதான் நிறுத்துவார்கள் என்றும், ஆரியகுளத்தைப் புனரமைத்து இருக்கைகளை அமைத்தால் அவ்வாறு பக்தர்களுக்கான வாகனத் தரிப்பிடம் இல்லாமற்போவதால், விகாரைக்கு நெருக்கடி ஏற்படும் எனவும், இதன்மூலம் விகாரையை இல்லாதொழிக்க யாழ். நகர மேயர் முற்படுகிறார் என்றும் அந்தக் கடிதத்தில் நாக விகாராதிபதி கடும் தொனியில் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை முன்னைய விகாராதி பதியின் உடலை தகனம் செய்ய முயன்றபோது அதற்கு தடையுத்தரவு வாங்க முதல்வர் மணிவண்ணன் எடுத்த முயற்சிகளையும் இந்தக் கடிதத்தில் சாடியுள்ள விகாராதிபதி, இப்போது விகாரையின் இருப்புக்கே நெருக்கடியைக் கொண்டுவர முற்படுகின்றார் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளபோதும், கடிதம் குறித்த மாநகர சபைக்கு போய்ச் சேர்ந்ததா? என்பது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை வட்டாரங்கள் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. (ஏ-26)

## வங்கக்....

கின்றன. இதன் நகர்வு பற்றி இன்று அல்லது நாளையே உறுதிப்படுத்த முடியும். எனினும் இது புயலாக வலுப்பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிக மிக குறைவாகவே உள்ளன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (ஒ-5)

## உள்ளூர்...

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரிடம், யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நீண்ட காலம் முடக்கப்பட்டிருந்து, தற்போது நாடு வழமைக்குத் திரும்பிவரும் நிலையில், பண்டிகைக் காலத்தைக் கருத்திற்கொண்டு வர்த்தக நிலையங்கள் இரவு நேரங்களில் திறந்துள்ளன. இரவு 9 மணிவரை அரச, தனியார் பஸ் சேவைகள் இடம்பெறுமாக இருந்தால் அது மக்களுக்கு நன்மை பயக்கும். மாவட்ட செயலர் அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் வணிகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஏ-இ)

## மாவிட்டபுரத்தில்...

பெறவுள்ளது.

இலங்கை சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்தப் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மருத்துவ நிபுணர் கமலாகரனின் உதவியில் இந்தத் திருப்பணிகள் நடைபெறவுள்ளன.

இந்த வளாகத்தில் திருக்குறள் முழுவதும் காட்சிப்படுத்துவதுடன், திருக்குறள் ஆய்வு நூலகம் மற்றும் திருக்குறள் ஆய்வு அரங்கம், தியான நிலையம் எனப்பல விடயங்கள் மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

## கொரோனா....

னர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

இந்த உயிரிழப்புகளுடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 611 ஆக உயர்ந்துள்ளது.

அதேவேளை, நேற்று மேலும் 555 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்தது. அதையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 36 ஆயிரத்து 084 ஆக உயர்ந்துள்ளது. (ஏ-இ)

## சீருடை...

கல்வி அமைச்சு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்குச் சீருடை கட்டாயம் அல்ல என்றும், அவர்கள் விரும்பிய ஆடைகளை அணிய முடியும் என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா அறிவித்துள்ளார். (ஏ-இ)

## கர்ப்பிணி...

இருந்த 380 ரூபா விலையில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் மு.நந்தகோபாலன் மேற்கொண்டுள்ளார். கர்ப்பிணிகள் தத்தமது பிரிவுக்குரிய கூட்டுறவுச் சங்கங்கக் கிளைகளில் அங்கர்களைக் கொள்வனவு செய்ய முடியும். எனினும் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகள் மாத்திரம், கொடிகாமம் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கர்களைக் கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கர் பெட்டிகள் வடக்கை நாளை செவ்வாய்க்கிழமை வந்தடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் அதன் பின்னரே விநியோகம் ஆரம்பமாகும் என்றும் கூட்டுறவு ஆணையாளர் தெரிவித்தார். (ஒ-5)

## யாழ்ப்பாணத்துக்கு...

ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கிடைத்த வாய்ப்பை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் சிலரின் செயற்பாடு காரணமாக இழக்க முடியாது என்றும் வடக்கு மாகாண ஆளுநர் இதில் தலையீடு செய்து திட்டம் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பால் பண்ணையாளர்கள் கோருகின்றனர். பிரான்ஸ் அரசின் உதவியில் இலங்கையில் பால் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்குடன் நிதி வழங்கப்படவுள்ளது. இலங்கையிலுள்ள 5 மாவட்டங்கள் இந்தத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டமே தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை யாழ்கோ நிறுவனத்தின் ஊடாக செயற்படுத்த முடியும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆனாலும், யாழ்கோ ஊடாக அதனை நடைமுறைப்படுத்த முடியாது என்று வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தத் திட்டம் கைநழுவி போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ஒ-5)

## நல்லூர்...

ராவது நிர்வாக அதிகாரியாக குமரேஷ் ஷயந்தன் மாப்பாண முதலியார் நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியாக குமாரதாஸ் மாப்பாண முதலியார் 1964ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் செயற்பட்டு வந்தார். அவர் கடந்த 9ஆம் திகதி இறைபதமடைந்தார்.

இந்தநிலையில் நேற்று குமரேஷ் ஷயந்தன் மாப்பாண முதலியார் உத்தியோகபூர்வமாக நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் நிர்வாக அதிகாரியாகப் பதவியேற்றதோடு, ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாட்டிலும் கலந்துகொண்டார். (ஏ-27)

## தென்னம்பிள்ளைகளை..

ணுவம், அந்தக் காணிகளில் தென்னம்பிள்ளைகளை நட்டு நிரந்தரமாக ஆக்கிரமிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது என்று வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம், மற்றும் செயலர் ஆகியோர் கையெழுத்திட்டு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

31 ஆண்டுகளாக வலி. வடக்கிலிருந்து இராணுவத்தால் விரட்டப்பட்டு இன்றுவரை மீளக்குடியமர முடியாமல் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள், வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் அவல வாழ்க்கை வாழும் மக்களில் ஒரு பகுதியினர் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மிகுதியானவர்களில் மயிலிட்டி, பலாலி, வசாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளில் நிலவிடுவிப்பு நடைபெறாது 3500 ஏக்கர் பரப்பளவில் குடியேற முடியாத மிகுந்த ஏக்கத்துடன் வாழ்வாதார அவலங்களுடன் எல்லைகளில் நின்று பார்த்துத் திரும்புகிறார்கள், உயிரிழக்கின்றார்கள்.

மக்கள் காணிகளின் விடுபடாத காணிகளில், மயிலிட்டி, பலாலி பகுதிகளின் மீனவக்குடும்பங்கள் தொழிற்பாதிப்பால் அவலப்படுகிறார்கள். இப்பகுதியின் விவசாய நிலங்களும் ( அண்ணளவாக 2000 ஏக்கர் ) விடுவிக்கப்படாத தால் பெரிதும் பாதிக்கப்பட்டு அவலப்படுகிறார்கள்.

விவசாய நிலங்களில் இராணுவம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு பருத்தித்துறை பொன்னாலை வீதியின் இருமருங்கிலும் மக்களின் உறுதிக் காணிகளில் வளர்ந்த மரங்களை அழித்து தென்னை நடுவதற்கு ஆயிரக் கணக்கில் கிடங்குகள் வெட்டுகிறார்கள். இந்தச் செயலால் மக்கள் நிலவிடுவிப்பு சாத்தியமில்லை என்று ஏங்குகிறார்கள். இந்தப் பகுதிகளில் இருந்த பாடசாலை, ஆலயங்கள், தேவாலயங்கள், கன்னியாஸ்திரி மடங்கள், வீடுகள் என்பன அழிக்கப் பட்டமை வெளிப்படுகின்றது.

அத்தோடு பெருஞ்செலவில் பகுதியளவில் புனரமைக்கப் பட்ட மீன்பிடி துறைமுகம் மயிலிட்டியின் பெரும்பகுதி மீனவக் குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படாததால் துறைமுகம் மயிலிட்டி மக்களுக்கு பிரயோசனமற்றநிலையில் காணப்படுகிறது. மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் அழிக்கப்பட்டதால் ஒதுக்கப்படும் நிதியில் பூரணமாக வீடுகளை அமைக்க, திருத்தமுடியவில்லை என்பதோடு பலவசதிகளற்ற நிலையும் உள்ளது. குறிப்பாக சுகாதார, போக்குவரத்து, பாடசாலை போன்ற வசதிகள் நடைபெறவில்லை என்பதோடு சுற்றிவர இராணுவமும் நிலைகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் வலி. வடக்கில் ஒரு அங்குல நிலம் கூட இராணுவத்தால் விடுவிக்கப்பட வில்லை. அத்தோடு அனுப்பப்பட்ட வேண்டுகோள்களுக்கு பதிலளிக்கப்படாத நிலையுள்ளது. என.வே 31 வருட துயர்துடைக்க சகல நிலையிலுள்ளவர்களும் குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் ஆகியோரும் உடன் மீள்குடியேற்றத்துக்கும் வாழ்வாதாரத்துக்கும் ஆவன செய்வீர்கள் என மனிதாபிமானத்தோடு காத்திருக்கின்றோம்- என்றுள்ளது. (ஒ-5)

## நெடுந்தூர...

பட்டுள்ளன என்று வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது. இந்தத் தூர சேவைகளில் பயணம் செய்யும் ஊழியர்கள் சமூக இடைவெளியைப் பேணுவதுடன், இரு தடுப்பூசி டோஸ்கள் ஏற்றியமைக்கான அட்டையைக் கொண்டுசெல்வது பயணத்தின்போது ஏற்படும் வீண் சிரமங்களைத் தவிர்க்க உதவும் என்று பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஏ-இ)

## 10கிலோ...

கசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும், அவரிடம் இருந்து 10 கிலோ 370 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் பணிப்பின்பேரில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விதானகே, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள, மன்னார் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்புப் பிரிவுப் பொறுப்பதிகரி திலங்க ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் மன்னார், கீரி பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-213)

175.0 lpi © 2000 Agfa-Gevaert N.V.

# பந்தாடியது பாகிஸ்தான்

## இந்தியா வரலாற்றுத் தோல்வி



டுபாய், ஒக். 25

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணியை 10 இலக்குகளால் வீழ்த்தியது பாகிஸ்தான். உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் முதல் தடவையாக இந்திய அணியை வீழ்த்தி தனது வரலாற்றுத் தடமொன்றை நேற்றுப் பதித்தது பாகிஸ்தான் அணி. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத்தில் தடுமாறியது. 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 151 ஓட்டங்களையே பெற முடிந்தது. ரோகித் ஓட்டமெதையும் பெறாமலும், கே.எல். ராகுல் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்த போதிலும் கோலியின் நிதான ஆட்டத்தால் இந்தியா ஒருவாறு 151 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டியது. கோலி 57 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சகின் அப்ரிடி 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு, அந்த அணி ஆரம்ப வீரர்களான அசாம், ரிஸ்வான் இருவரும் முதுகெலும்பாக இருந்து ஆட்டத்தை வெற்றியின் பக்கம் நகர்த்திச் சென்றனர். அதிரடி, நிதானம் என்று இந்தியப் பந்துவீச்சாளர்களைத் திணற வைத்தனர் பாகிஸ்தானின் ஆரம்ப வீரர்கள். இவர்களில் ஒருவரையேனும் வீழ்த்துவதற்கு இந்தியப் பந்துவீச்சாளர்களால் இயலவில்லை. முடிவில் 10 இலக்குகளால் வென்றது பாகிஸ்தான். ரிஸ்வான் 78 ஓட்டங்களுடனும் அசாம் 68 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.(ம)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் முன்பாக பலாலி வீதியில் இருந்து 100 M தூரத்தில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு. 1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

**077 6234204, 077 468 3354**

**கண்ணீர் வணக்கம்!**



பிறப்பு 19 . 07 . 1973

இறப்பு 24 . 10 . 2021

எமது நண்பன் **நவரத்தினம் உமாகரன்** அவர்களது ஆருயிர் சகோதரன்

**நவரத்தினம் முரளீதரன்**

அவர்களது எதிர்பாராத இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை பகிர்ந்து கொள்கின்றோம்.

**1997 உயர்தரப்பிரிவு நண்பர்கள்**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**
**சாவகச்சேரி.**

# இலங்கை மிரட்டல் வீழ்ந்தது வங்கம்!

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை அணி. ஒரு கட்டத்தில் தோல்வியை நோக்கி நடைபோட்ட இலங்கை அணி அசலன்க, பானுக ஆகியோரின் அதிரடி ஆட்டத்தால் தோல்வியில் இருந்து மீண்டு அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்ப வீரர்களான நயிம், டாஸ் இணைந்து சொல்லிக்கொள்ளும் படியான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். அணி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டாஸ். சகிப் அல் ஹசன் 10 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். நயிமுடன் இணைந்து சிறப்பான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தார் ரகிம். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 52 பந்துகளில் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் நயிம். உண்மையில் அவருடைய இன்னிங்ஸால் இலங்கை அணிக்குப் பின்னடைவு என்று ஏற்படவில்லை. ஆனால், ரகிம் 37 பந்துகளில் 57 ஓட்டங்களைக் குவித்து அச்சுறுத்தினார். முடிவில் பங்களாதேஷ் அணி 4 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சாமிக கருணாரத்ன, பெர்னாண்டோ, லகிரு குமார ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்ப வீரரான குசல் பெரேரா பெரியதொரு ஏமாற்றத்தைக் கொடுத்தார். அவர் வெறும் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். பதும் நிஷங்க ஓர் முனையில் நிலைத்துநிற்க மறுமுனையில் அதிரடி காட்டினார் அசலன்க. பவர்பிளே முடிவடையும் போது இலங்கை அணி ஓர் இலக்கை இழந்து 50 ஓட்டங்களைக் கடந்திருந்தது. 9ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பதும் நிஷங்கவையும், ஓட்டமெதையும் பெறாத நிலையில் அவிஸ்க பெர்னாண்டோவையும் வெளியேற்றி ...ருப்பத்தை ஏற்படுத்தினார் சகிப் அல் ஹசன். வனிந்து வந்தவேகத்தில் வெளியேறினார் எனினும் அசலன்கவுக்குப் ...லமாக நின்றார் பானுக ராஜபக்ச. ...ாய்புடின், மகமதுல்லா ஆகியோரின் ...ந்துப் பரிமாற்றங்கள் சிறப்பாகக் கவ...ரிக்கப்பட 6 இலக்குகளால் வெற்றி

**URGENT JOB VACANCY**
**IT STAFF**
Expected IT Knowledge & Web Design
contact No.: 070 613 6136,
076 255 5529, 075 095 4309

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
சுவாமியார் வீதியில்
மூன்று பரப்புக் காணி வீட்டுடன்
விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை
**077 821 2391**

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் சந்தி பலாலி வீதியில் இருந்து 500 M தூரத்தில் 12 பரப்பு காணி விற்பனைக்கு. 1 1/2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
**077 2880 152, 076 4053 965**

புதிய கிளை **திறப்பு விழா**
**XPERT**
**PHARMACY**
**LABORATORY**
எமது வாடிக்கையாளர் நன்மைகருதி
**XPERT நிறுவனம்**
தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில்
**பார்மசி மற்றும் ஆய்வுகூடத்தினை**
இன்று (25.10.2021) காலை 10 மணிக்கு
உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கின்றது
என்பதனை வாடிக்கையாளர் அனைவருக்கும்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்...!
காலம்: 25, ஒக்டோபர், 2021
நேரம்: காலை 10.00 மணி
இடம்: இல.14, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
வாடிக்கையாளராகிய உங்கள் ஆதரவுக்கு
எமது நன்றிகள்!
NO.14, POINT PEDRO ROAD,
(NEAR TEACHING HOSPITAL), JAFFNA.
MOB : 0772849686 HOTLINE: 0777033494



...ப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.